பான் ஜே 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 30—5—54 | இதழ் 48

அந்தக் 'கழுகுகள்'

"மாஞ்சேஸ்டரிலிருந்து வந்தோர் மனுவை அறிந்தது எப்படி? நீதிமன்றத்தின் படிக் கட்டுகளை ஏறினால், மனுவும் மாந்தாதாவும் ஏற்படுத்திய முறைகள்தானே சட்டமாக விளங்குகின்றன! வெள்ளையன் ஆட்சியில் இந்த விசித்திரமான கட்டம் ஏற்பட்டது எப்படி?"

*

ஆயிரமாயிரம் பொதுக் கூட்டங்களிலே, நமது தோழர்கள் முழக்கமிட்ட போதெல்லாம், முகத்தைச் சுளித்துக்கொண்டு, எதற்கெடுத்தாலும் 'எங்களவாளையே, தூஷிக்கிறு! என்று தூற்றிய தோழர்கள், உண்டு, இங்கே.

*

"ஐயனே! ஆங்கிலேயன், பாஷை நீசபாஷையெனப் புகன்றீரே—ஆனால், அதனைக் கேட்டு ஏமாந்தவர் எங்கள் சந்ததிதானே? நீசபாஷை என்று குறைகூறிய நீங்கள், அந்த 'நீசபாஷை'யைப்படித்து, எவ்வளவு பெரியவாளாகிவிட்டீர்கள்! எங்கு பார்த்தாலும், உத்யோகம்வகிக்கிறீர்கள்!! இந்த இரட்டை நாக்கு இருக்கலாமா உங்களுக்கு? ஏமாற்றினீர்! எங்களை. ஆனால், நீங்கள் ஏமாற்றம் பெற்றீர்!!"

* * *

இவ்விதம், ஒரு சாரார் உயர்ந்த அந்தஸ்துக்குச் சென்றதன் ரகசியத்தை ஆராய்ந்து சொன்னான், ஆயாசத்தோடு, 'எதற்கெடுத்தாலும் இவாளுக்கு, எங்களவா மீதுதான் பகை' என்று சீறிய செல்வர்கள் எத்தனைபேர்! கடிந்துரைத்த கூட்டத்தினர் எவ்வளவு!!

*

அவர்களை அறைகூவி, அழைக்கிறோம்! இதோ, கூறுகிறார், ஒருவர். "வெள்ளையன் வந்தபோது, இந்த நாட்டின் பிற்போக்காளர்களைக் கலந்து கொண்டு சட்டங்களைச் செய்தான்", என்பதாக. பிற்போக்காளரைக் கலந்தானாம்! இதனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால், சமூகத்தை அழைத்துச் சென்றானாம்!! பிற்போக்கான நிலையில், நம்மை அழைத்துச் செல்லுவதென்பது, அவனுக்கு தேவையாயிருந்ததாம். அந்தத் தேவைக்கு உறுதுணையாக, உதவி புரிந்தவராம், அப்போதிருந்த பிற்போக்காளர்கள்.

நாம்தானிந்து, 'இவர்கள்' என்று குற்றம் சாட்டுகிறோம்.

ஆனால், அவர், அகில இந்தியத் தலைவர் என்பதால் அவ்வண்ணம் கூறாமல், 'பிற்போக்காளர்' என்று வர்ணிக்கிறார்.

*

அந்தப் பிற்போக்காளர், வெள்ளையனுடன் கூடிக்கொண்டு அவனுக்கு வெண்சாமரம் வீசியவண்ணம், பெற்றுக்கொண்ட சலுகைகள், ஏராளம்; அன்று கிடைத்த செல்வாக்கு — இன்னும் அழியவில்லை — அசையவில்லை. வெள்ளையன், அந்நியன்! — என்று ஜான்ஸி லட்சுமிபாயும், ஏராளமான வீரமாபினரும், எதிர்த்து நின்றகாலத்திலே, 'ஆமாம், அந்நியன்தான்— அதிலும், கிருஸ்தவன். மாட்டிறைச்சியைத்தின்னும் மாபாவி! துப்பாக்கியில் கொழுப்பைத் தடவுகிறானும் — இந்துமதத்தை அழிப்பதற்காகவே, வருகிறானும்" என்று கூக்குரலிட்டு, அவனை எதிர்த்து அரசுகள் பலவற்றை மோதவிட்டு, அப்படியும் அவன் வெற்றிபெற்றதைக் கண்டபின், அவனுடைய ராஜசபைக்கு ஆலோசகர்களாகி, மனுவையும் மாந்தாதாவையும் சுட்டிக்காட்டி, 'இந்துக்களின் மதஉணர்ச்சியைப் புண்படுத்தியதாலேயே, சிப்பாய் கலகம் வந்தது. இங்கிலீஷ்காரர்களே! நீங்கள் இந்நாட்டையாளவேண்டுமானால், மத உணர்ச்சியைப் புண்படுத்தாதீர்!" எனச் சொல்லி, அதன்மூலம் அந்நியனுக்கு ஆலோசனையும் தமது வர்க்கத்துக்கு போகவாழ்வும் தேடிக்கொண்ட, அந்தப் பிற்போக்காளர்களைத்தான், பண்டிதநேரு குறிப்பிடுகிறார்—அவர்களின் ஒத்துழைப்பாலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் நாட்டை அழைத்துச் சென்றானும், வெள்ளையன். கூறுகிறார்... நேரு! அதே நேரத்தில்

வெள்ளையன் செய்த சீர்திருத்தங்களையும் மறந்துவிடவில்லை—"பல சீர்திருத்தங்களை அவர்கள் செய்திருக்கலாம். ஆனால் நாகரிகச் சொல்லிலே என்று இருந்துவிட்டார்கள்" என்று குறிப்பிடுகிறார். இந்தப் பிற்போக்காளர்கள், தொல்லை தருவார்கள், எனினும் தொல்லை என்று இருந்துவிட்டனராம் அவர்கள். அந்தப் பிற்போக்காளர்கள், யார்? வெள்ளையன் வந்ததாலேதான், அவர்களால் அழைக்கப்பட்டவர்களா — அல்ல! அல்ல!! இங்கே இருந்தவர்கள் — ஆஸ்ரமத்திலிருந்த மதத்தை அரண்மனைக்கு அழைத்துவந்து அரசர்களுக்கு வெண்சாமரமாக ஆக்கி— நினைத்தவர்கள். அந்த உண்மையையும், பண்டிதர் உணர்ந்திருக்கிறார். அதனாலேயே தெரிவிக்கிறார், 'அப்போது சமூகத்திலிருந்த ஒருபகுதியின பிற்போக்காளர்கள்' என்பதாக. அவர்கள், வெள்ளையனுடன் கூடி, அவனுக்கு ஆலோசனையாளர்களாக மாறி தமது பழைய கருத்துக்களை சட்ட நூலில் ஏற்றிக்கொண்டனராம். இதனை விளக்க வந்த பண்டிதர், 'ஏ! பிற்போக்காளரே—இந்து மதம் இன்று கெட்டுச் சீரழிந்ததற்கு காரணம் அந்த பிற்போக்காளரின் செருமதிதான்' என்றும் தெரிவிக்கிறார்.

'இந்து மதம், காலதேசவர்த்தமானத்துக்கேற்றபடி, வளர்ந்து வந்துகொண்டிருந்தது. ஆனால், வெள்ளையன் காலத்தில், அதன் கொள்கைகள் சட்டமாயின. இவ்வண்ணம், சட்டமாகும்படி செய்தோர், அப்போது சமூகத்திலே உலவிக்கொண்டிருந்த பிற்போக்காளர் வெள்ளையன் வருவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமது மதத்தை, சட்டபூர்வமாக்கவேண்டுமெனும் ஆசை கொண்டிருந்தனர், அவர்கள். அந்த ஆசையால்தான், இன்று இந்துமதம் சீரழிந்தது" சொல்கிறார், நேரு.

நூற்றுண்டுகளுக்குமுன்பே இருந்ததாம் அரசபீடத்தில் அமர்த்த வேண்டும் இந்து மதத்தை! எனும் ஆசை. பண்டிதரின் கணக்கு தவறென்போம். நூற்றுக்கு பல காலத்துக்கு முன்பே, ஆஸ்ரமத்திலே இருந்தோர் அரசபீடத்தை நோக்கி வலம் வரத் துவக்கிவிட்டனர். மன்னர்களின் அவையிலே மந்திரிகளையும், அரசபீடத்திலே மெய்ஞ்ஞானத்தையும், காணும் ஆவல், இந்து மதப்பிரசாரகர்களுக்கு, ஆரம்ப காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அதனால் கவிழ்ந்த சாம்ராஜ்யங்கள் பல! — மூளாத சாம்ராஜ்யங்கள் பல!! — ஓர் அரசு கவிழ்ந்து மற்றோர் அரசு முளைக்கும்போதெல்லாம், இந்த கங்காணிக்காரர்கள் கூடாரத்தைமட்டும் நம்பியிருக்கவில்லை. மன்னர்களின் செல்வாக்கை வேட்டையாடவும் முயன்றனர். அவ்வண்ணம், சிம்மாசனத்தின் நிழலில், தமது வாசகமே வேதமாகவும் மொழியே சட்டமாகவும் ஆகும்படிச் செய்து, அந்நாள் மக்களை, தமது கூடாரத்துக்குள் கொண்டுவர முயன்ற, இந்துமத ஸ்தாபகர்கள் பலர், பலர்! இந்தப் பசி, ராஜகிரீடத்தை துறந்து புதுமதம் கண்ட புத்தனுடைய கொள்கைகள் பரவ ஆரம்பித்ததும், அதிகமாயிற்று. அதன் பிறகு, தமது இந்துமதத்திலே இருக்கும் குறைகளை பிறர் எடுத்துச் சொல்ல முனைவரத் துவங்கியதும், போட்டியாக பல புது மதங்கள் உலாவத் தோன்றியதும், ஆண்டவனையும், அந்த ஆத்மாவையும், இந்த 'ஆத்மாக்கள்' நம்பிக்கொண்டிருக்கவில்லை. புல்லேந்திய வண்ணமே, போக போக்கியங்களை அனுபவிக்கலாயினர்! விழியால், விலைமங்கையை மிரட்டுவதில், ஆனந்தத்தை அனுபவிக்கலாயினர்! சாணக்கியர்கள், மிகுந்தனர்—சதுரங்கத்தைப் பரப்புவது, அரசதர்மம் என்றனர்— மதமும் மகேசனின் நாமாவளியும் ஆர்ப்பரிக்கும் அரசகூடத்துக்குள் நுழைந்தது. வேதியர்கள், மரஉரியோடு, நின்றுவிடவில்லை — பட்டாடையும். காதுகளில் குண்டலமும், உடலில் ஆபரணச் சங்கிலியும், அணியலாயினர். அப்போதே, இந்து மதம், வந்தவேலையை மறந்து, சொந்த நலனை நினைக்க குருக்களின் கூடாரமாயிற்று! அரசர்களை மோதவிடுவதாலும், இடையில் எவன் கை ஓங்குகிறதோ அவனிடம் சேர்ந்து ஆதரவு பெறுவதாலும், தமது அந்தஸ்தை நிலைநாட்டிட முயன்றனர், சனாதனிகள் ஓயாத அக்கிரமம் தான், இங்கு வெள்ளையன் அடியெடுத்து வைத்தபோது நிகழ்ந்தது! அவனைச் சூழ்ந்துகொண்டு, வளமும் வாய்ப்பும் பெற்றனர், அவர்கள் அந்த வாய்ப்பே, இந்து மதத்தை அழித்தது! — என்கிறார் நேரு. இல்லையென்றால், அதுவும் சிறந்ததோர் மதமாக, காலத்துக்கேற்றபடி மாறி, மதமாக இருந்திருக்கும் என்பதாக நினைக்கிறார். இல்லையே, எனும் ஏக்கத்தின் விளைவு போலும், இவ்வண்ணம் பண்டிதர், புலம்புவது! மதம் கெட்டுகெட்டுப் போகட்டும்— இன்று பண்டிதர் கூறும் இதே விளக்கத்தைத்தானே இதுவரை நாம் கூறிவந்தோம்! பலன் என்ன கண்டோம்? 123A, தடை, சிறை—இன்று பண்டிதர் கூறுகிறார் அப்போதிருந்த 'பிற்போக்காளர்கள்' ஆங்கிலேயனுடன் கூடிக்கொண்டு, இந்துமதத்தை சட்ட ஏடுகளில் ஏற்றினர், என்பதாக! அவ்வண்ணம் அன்று ஏற்றப்பட்டு விட்டதாலேயே இன்று அவைகளில் அதே சட்டத்தில், திருத்தவேண்டிய கட்டம் வந்துவிட்டதாகக் கூறுகிறார்!!

திருத்தட்டும் — ஆனால், அவர் வீசுகிறாரே, ஒரு சொல், அப்போதிருந்த 'பிற்போக்காளர்' என்பதாக அதனையே கவனிக்கக் கோருகிறோம். பிற்போக்காளராம்!—யார் அந்தப் பிற்போக்காளர்கள்? சொல்லத் தயங்குகிறார், ஐயா! நாம் வெளிப்படையாகச் சொல்லுகிறோம்!! யார், அந்தப் பிற்போக்காளர்? அவர்கள், அன்றுமட்டுந்தானா இருந்தார்கள் — அரசபீடங்களைக் கைக்கொள்ளும் ஆசை வெள்ளையன் வந்தபோது மட்டும் தானா இருந்தது—இன்றும், இதோ, காண்கிறோம்! பண்டிதரின் அருகிலேயே அலங்காசனம் உருவிலே, ஆச்சாரியார் உருவத்திலே, காட்சி தருகிறார்களே! இவர்கள் யார்! நண்பர்கள், என்கிறார்—பண்டிதர். வீழ்ந்த அரசர்களும், அப்படித்தான் கருதினார்கள். ராஜகுரு— முதல் குரு — என்று அப்போது பட்டம். இப்போது, மேதை—

திருமணம்

திருமுக்கூடல் மேத்தாமூர் ர. விசயனுக்கும் செயலட்சுமிக்கும் 23—5—54ல் திரு. ஈழத்தடிகள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

விவேகி—என்ற விருது. இந்த வித்தியாசம் தவிர, இவர்கள் யார்! முற்போக்காளரா? ஆங்கில மொழியும், அரசியல் அறிவும், நவீன கொள்கைகளும் கொண்டோர் என்பதைத் தவிர அந்தக்கால பிற்போக்காளரிடம் இருந்த நச்சுள்ளம் இவர்களிடத்திலும் இல்லையென்று கூறமுடியுமா! முன்பு பர்ணசாலை! இப்போது, பாராளுமன்றம்!!—இந்த வித்தியாசம் தவிர, மனவளத்தில் மாறுபாடுண்டோ இவர்களுக்கு எவ்வளவு குதித்திருக்கிறார்கள்—எப்படியெல்லாம் சீறுகிறார்கள்—இந்துமத சட்டத்தில் சிறு திருத்தம் செய்ய முன்வந்தால். சீறுவதும், பாய்வதும், எத்தனைச் செலவிறது! காலம் மாறிற்று—ஞ்சகாசம் இந்த உடல்களிலேகூட்டு கோட்டும் மாறிற்று—ஆனால், மனம்...? மாறவில்லையே! அரசுபீடத்து செல்வாக்கை உபயோகித்து, மாண்டிடும் மதத்தை, மக்கள் மன்றத்தில் பரப்ப, துவண்டுபோன நிலையிலும் துணைத்தனர் நடத்த முன்வந்த அன்பர் ஆச்சாரியார், ஆடிய ஆட்டமென்ன! பாடிய பதிகம் எத்தனை!! பார்க்கிறோமே, சர்க்கார் காரியாலயத்திலிருந்தாலும் தன் வீட்டுக்குப் போனாலும் 'பஜகோவிந்த' விளக்கமும், பாகவத புராண மகிமையும்தானே, நாவிலும் பேனாவிலும் நர்த்தனமாடிற்று! வெள்ளையனுடைக்கி சட்டநூலில் தமது கொள்கைகளைப் புகுத்தினர் அந்தக்காலப் பிற்போக்காளர்—என்று அழகாக, ஆணித்தரமாக வெளியிடுகிறார், பண்டிதர்! அறிவுச்சொல், ஆராய்ச்சியிலிருந்து உதிர்ந்தசொல்—ஆனால், இன்றைய தினம் அவரைச் சுற்றியபடி ஆபிரிக மலானையும் ஐசனோவரையும் நிமிடத்துக்கோர்முறை பேச்சில இழுத்து, பெருமைக்குரிய ஆலோசனைகளை அள்ளி வழங்கிடும் இந்த அற்புத சித்தர்கள், எந்த ரகத்திலிருக்கிறார்கள். அந்தக்கால மன்னர்களையும், அப்போது வந்த வெள்ளையனையும் குறை கூறுகிறாரே, பண்டிதர்—விபரீதிரன்போல. இன்று அவருடைய நிலை என்ன?

விசாகப்பட்டினம் துறைமுகத்திலே வெள்ளையன் கட்டித்தந்த கப்பல் இறக்கப்படும்பொழுது, தேங்காயுடைத்து விநாயகரை வணங்கியும்; அமாவாசை நிறைந்திருக்க, விடுமுறை விடுவதும்; ஆண்டவனின் கோயிலை அரசு முத்திரையாக ஆக்கிக்கொள்வதும்; கும்பமேளாவுக்கு குடும்பத்தோடு சென்று தரிசிப்பதும்; ராமேஸ்வரத்தில் குருக்கள் காலில் ராஷ்டிரபதி வீழ்ந்து கும்பிடுவதும்; ராகுகாலமும், ஜெபமும் பார்த்துக்கொண்டு, நாடாள்வோர் வேலைசெய்வதும்; எதைக் காட்டுகிறது? வெள்ளையனின் சீர்திருத்த எண்ணங்களுக்கு மூடி போட, இந்த பிற்போக்காளர் பாய்வதை, இல்லையென்னமுடியுமா? பண்டிதர், பாராளுமன்றத்தில் 'பழையகாலத்தை'ப் பற்றி பேசினாரே பொழிய, 'இந்த காலத்தை'ப் பற்றி எண்ணத் தவறிவிட்டார்! இல்லையென்றால், எந்தமதம், ஆகக் கட்டிடுக்க, வந்தால் தானும் அழிந்து தாங்கிபோனதையும் அழித்தது—எனும் விவேகிகளின் கருத்தும் இந்த வீரர், உபேதபாதையில் சென்று கொண்டிருப்பாரா! வெள்ளையனை வலையில் போட்டனராம்! பிற்போக்காளர்கள்—உண்மை ஆனால், இவரை, இதோ, சூழ்ந்தவண்ணம் அங்கப் பிற்போக்காளர் இருக்கின்றனரே. இல்லையென்றால் மதவாதிகளுக்கு முன்னேறும் பிள்ளையாக இருக்குமா, இந்த அரசு! மதவாதிகளைக் கண்டுமிரண்டு, சாதாரண திருத்த மசோதாவை சட்டமாக்க, நாட்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டே, போகுமா!!

பிற்போக்காளர்கள். அன்றுமிருந்தார்கள்—இன்றுமிருக்கிறார்கள்.

அன்று ஆஸ்ரமத்திலிருந்தார்கள், இன்று அரசியலில் இருக்கிறார்கள்.

அன்று கையிலிருந்தது, கமண்டலம்; இன்று, சட்ட நூல்.

அன்று, வாயில், வேதம்; இன்று உலக மொழி.

இதுதான் மாறுதலேயொழிய, அன்று இருந்த 'கழுகு'கள் இன்றும் இருக்கின்றன; மாற்றுருவில். இதைத் தெரிந்துகொள்ளவேண்டும்—பண்டிதர் அல்ல, அவரைப்போல 'இரண்டுங்கெட்டான்' நிலையிலிருப்போர்.

அந்தப் பிற்போக்காளரின் பேத மதி ஒழிக்கப்பட்டால்தான், புது வாழ்வு மலரும்.

அவர்களுக்கு, எந்த அரசு வந்தாலும் சரி, எந்த அரசுபோனாலும் சரி, அதன் காலவருடி காரியத்தைச் சாதிக்கவேண்டுமென்பது, லட்சியம்.

ஆண்டவனும், கோயிலும், அவர்களுக்கோர் திரை

அந்தப் பிற்போக்காளர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை—கண்டாலே, தெரிந்து கொள்ளலாம்.

அத்தகைய பேதமதியினரைப் போக்கி, மாணபஸ்தர்களை உண்டாக்குவதுதான், அறிவியக்கத்தின் பணி—அயராத பணி. ❀

வெளியில், வீரர்கள்

கிட்டத்தட்ட 11 மாதங்களாக சிறையில் வாடிய தூத்துக்குடி அறப்போர் வீரர்களான எம். எஸ். சிவசாமி இராசு. தங்கப்பழம், எஸ் நடராசன், கே. வி. கே சாமி முதலிய 27 தோழர்களை ஜாமீனில் விடுவிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் 26-ந்தேதி உத்திரவு பிறப்பித்துள்ளது தோழர்கள் அனைவரும், தூத்துக்குடிக்குள். நுழையக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நகரசபை உறுப்பினர்களான தங்கப்பழம், நடராசன் ஆகிய இருவரும் நகரசபை கூட்டங்களில் கலந்துகொள்ளலாம என்று அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது கழகச் சார்பில் தொடரப்பட்ட இந்த வழக்கில், நமக்காக, பாரிஸ்டர் V. L. எதிராஜூ அவர்களும் வழக்கறிஞர் K. நாராயணசாமி சுந்தரம் ஆகியோரும் ஆஜரானார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, கண்மணிகளை வெளியே காணுகிறோம்! களிக்கிறோம்!! என்று தாயக மண்ணில், விடுதலை வீரர்களாக உலவுவார்களோ?—என்ற ஏக்கம் நெஞ்சைத் துளைத்தாலும் இடையில நம்முடனிருக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்கிறோம். வாழ்க, வீரர்கள்! வருக, வெற்றி!!

'இல்லற ஜோதி'களுக்கு!

"தாடியை எடுக்கப் போகிறீரா, இல்லையா!"

"முடியாது!"

"தம்பி! அப்பாவின் மீசை தாடியைப் பார்த்தாயா......பயமாக இல்லை"

"ஆமாம் அம்மா!"

"சரி! புறப்படு, என்னுடன்"

*

தாடி மீசையை உடனே எடுங்கள்!

அப்பாவின் தாடி குத்துகிறது, என்னை!

உடனே 'க்ஷவரம்' செய்க!

இன்றேல், சோறு போடோம்!

வீட்டுக்குள் நுழையவிடோம்!

அருகில் நெருங்கவும் கூடாது"

*

'இல்லற ஜோதி'களைப் பற்றி, இந்திய பாராளு மன்றத்தில், ஏதேதோ பேசினராம், திருமண சட்டத்தின்மீது விவாதம் புரிகையில். அனந்தசயனனார், ஆர்ப்பரித்தாராம், 'இந்தப்பெண்களுக்கா, உரிமை! என்ன ஆவது நமது இந்துமதப் பெருமை!' என்றெல்லாம். அடுப்பூதும் பெண்களுக்கு உரிமைகள் எதற்கு என்று இருபதாம் நூற்றாண்டிலும் பேசும் சில பிரகிருதிகள் இன்னும் இருக்கிறார்கள்! அன்புக்குரியாளே, அடிசிற்கினியாளே, பதிசொல் தவறாத பாவாய் — என்று தனித்திருக்கும் போது வர்ணிக்கிறோமே, அது போதாதா—இந்தப் பெண்களுமா ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழ்வது? சகிக்கமுடியுமா இதனை! ஒப்போம் என்று ஓயாது கூச்சலிடுகிறார்கள். பெண் என்றால், கணவனின் காலைப் பிடித்து, சோறு வடித்துப் போட்டு, சொன்ன பேச்சைக் கேட்டுக்கிடப்பதே கடமை—அதுவே இந்துகுல தர்மத்தின் சிறப்பு — என்றெல்லாம் பேசுகிறார்கள். அந்தப் பெண்கள், தத்தமது உரிமைகளைப்பெற அறப்போர் துவங்கினால் என்ன ஆகும் இவர்களது நிலை! வாரதீர் அருகில்—பேசாதீர் என்னிடம் — தம்பி! அப்பா அருகில் போகாதே—சோறு இல்லை இன்றைக்கு — படுக்கையை வெளியில் போட்டிருக்கிறேன்—என்று 'அறப்போரில்' ஈடுபட்டுவிட்டால் என்ன செய்வர், இந்த ஆண்கள்! வாளும் வேலுமா தூக்கி வரவேண்டும். வனிதையர் வாய்மூடி மௌனியானாலே, அதனைத் தாங்கமுடியாது தத்தளிக்கும் வீரர்கள் எவ்வளவு பேர்! விழியைச் சிறிது உயர்த்தினாலே, இந்த ஆண் சிங்கங்கள் அலறுவர்!! அத்தகைய மனோபாவம், நமது நாட்டுப் பெண்களுக்கு வாராதேனும் தைரியத்தாலேயே, பெண்களுக்கேன் உரிமை—திருமண ரத்தா? கூடாதே!—என்றெல்லாம் கூவுகிறார்கள். அவ்வண்ணம், சண்டித்தனம் செய்யும் நொண்டிக்குதிரைகளுக்குச் சுட்டிக்காட்டத்தான் மேலேயிருக்கும் சம்பவம்.

*

அவர்கள் என்ன செய்வார்கள்? பெண்கள்! கணவன்மார்களைக் கெஞ்சினார்கள் — "காதலா! மீசையும் தாடியும் பார்க்கக் கொடூரமாயிருக்கிறது! தம்பி, தங்கை முத்தமிடப் பயப்படுகிறான். தூக்கி அவனைக் கொஞ்சும்போது, குத்துகிறதாம் முகத்திலுள்ள தாடி! வேண்டாம் இது. எடுத்து விடுங்கள்" என்று வேண்டினராம். கணவர்களோ, இசையவில்லை! அண்மையில் வரப்போகும் தங்கள் சமூகத்தின் 150-வது ஆண்டு விழாவையொட்டி தாடி வளர்த்துவருவதென, அவர்கள் சங்கம் முடிவுசெய்தது. கடந்த இரண்டு மாதமாக, அம்முடிவை நிறைவேற்றுவதற்காக, தாடி வளர்த்து வருகிறார்கள்! "இப்படி 526 பேர், தாடி மீசை வளர்ப்பதால், எங்கள் தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது. அவர்களின் தலைவர் வேண்டுமென்றே இந்த விபரீதக் கோரிக்கையை விடுத்து, எங்கள் வாயில் மண்ணைப் போட்டுவிட்டார் ஆகையால், கோர்ட்டார் அவர்களே! அவர்கள் எல்லாம் தாடி வளர்க்கக் கூடாதென, தடையுத்தரவு பிறப்பியுங்கள்" என்று அங்குள்ள முடிதிருத்தும் தொழிலகச் சங்கத்தார், நீதிமன்றத்தை நாடினராம்! நீதிமன்றம், என்ன செய்யும்? தனிப்பட்டோர் உரிமை—என்று தள்ளுபடி செய்து விட்டதாம், தாடி வளர்கிறது! சங்கடமும் வளர்கிறது, குடும்பப் பெண்களுக்கு!! இதமாகச் சொல்லியும், பதமாகப் பேசியும், பயன் தரவில்லை. 'நல்லதோர் காரியத்துக்காக, நாங்கள் தாடி வளர்க்கிறோம்!' என்கிறார்கள் கணவர்கள். அவர்களுக்கு அது நல்ல காரியம்! ஆனால், அவதி அவர்களை மணந்த பெண்களுக்குத்தானே தெரியும். ஒருநாள், இரண்டு நாளா—மாதமும் இரண்டாகிவிட்டது. வேண்டுகோள், பலன் தரவில்லை 526 நாட்கள் பங்களிலே, இன்பம், இல்லை! கணவர்களோ, புனித விழாவுக்கு — என்று புகல்கின்றனர். தாடியின் சங்கடமோ, சகிக்க முடியவில்லை! இந்தக் கேட்டின் விளைவுகளைத் தாங்கமுடியாத காரணத்தால், தாடிக்காரர்களின் மனைவியர் 526-பேரும், கையில் மேலே குறிப்பிட்ட முழக்கங்களை எழுதிய அட்டைகளை ஏந்தியவண்ணம், வீதிகளில் ஊர்வலமாகச் சென்று வருகிறார்களாம், கடந்த ஒரு வாரகாலமாக தம்மோடு தத்தமது குழந்தைகளையும், கூவும்படிச் சொல்லி, அழைத்துச் செல்கின்றனராம், அந்த ஊர்வலத்தில். 'ஒரு வாரம் வரை பொறுப்போம். அப்படியும் வழிக்கு வராவிடில் — அறப்போர், துவக்குவோம். வீட்டுக்குள்வராதே சோறு இல்லை! நெருங்காதே, அருகில்! — என்று கூறுவோம்' என, எச்சரித்திருக்கிறார்கள். இந்தவீராங்கனைகளுக்குத் தலைமைதாங்கி நடத்தும் அம்மணி, ஸ்டேல்லா ஷுல்மான் என்பாராம் மேற்கு நியுயார்க் ராஜ்பத்திலுள்ள மாண்டிகில்லோ எனும் குக்கிராமம் ஒன்றில், இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது என 'மெயில்' ஏடு கூறுகிறது.

*

இங்கேயும் பார்க்கிறோமல்லவா? திருப்பதிக்கு—பழனிக்கு— திருத்தணிக்கு—என்று பல பெயர்களைச் சொல்லி, தாடிவளர்க்கும் ஆசாமிகளை! அவர்களின் போக்கை, பயந்து அனுமதிக்கும், பெண்கள், 'மாண்டிகிலோ' வீராங்கனைகளைப்போல் ஒரு

(13-ம் பக்கம் பார்க்க)

[வீரன் பேட்டி]

வேலி தாண்டுகிறாள் மனைவி!

'சபாஷ்' என்கிறான், கணவன்!!

[வண்டு]

என்னுடைய மனைவியின் நடத்தைபற்றி, கண்டும் காணாமலும் எவ்வளவு பேசி வந்தீர்கள். சிலர் துணிந்தும் என் போக்கைக் கண்டித்தீர்கள் — என் மனைவியின் தகாச் செயலைக் கண்டிக்காத மடையன் என்ற நினைப்பால்! நான் மடையனல்ல—தியாகி.

இரவு நேரங்களிலும், சந்து முனைகளிலும் என்னுடைய பிரிய சகி, சங்கடமான பணிவிடையில் ஈடுபட்டது, சாதாரணமான காரியத்துக்கல்ல—அவளது செயல், ஒரு அருமையான லட்சியத்தைக்கொண்டது.

பக்கத்து வீட்டு கமலத்தை அடிக்கடி ஒப்பிட்டு 'அவள் பத்தினி—என் மனைவி, சாக்கடை' என்று நீங்களெல்லாம் பேசுவீர்களாம். உண்மைதான். என் மனைவி சாக்கடைதான்! ஆனால், ஏன் சாக்கடையானாள்? அவளுடைய கணவனான நான், ஏன், அவளை அந்தக் காரியத்துக்கு அனுமதித்தேன்? அதில்தானிருக்கிறது, எங்கள் தியாக உள்ளம்!

எமது தியாகத்தைத் தெரிந்துகொள்ளாமல், ஏதேதோ பேசிவிட்டீர்கள். பரவாயில்லை! இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள். தெரிந்துகொண்டதும், நிச்சயம் எமக்கு மாலை போட்டு வாழ்த்துப் பத்திரம்கூடப் படித்துக் கொடுப்பீர்.

என் மனைவி, சாக்கடை! பக்கத்து வீட்டாள், சந்தனம்! உதாரணம், மிகப் பொருத்தம். பக்கத்து வீட்டாளை, சந்தனம் என்று சொல்கிறீர்களே? எப்படிக் கூறமுடிந்தது! கெட்டது என்று ஒன்று இருந்தால் தானே நல்லதைக் கண்டுபிடிக்க முடியும்—என் மனைவி வேலி தாண்டியதால்தானே, பக்கத்து வீட்டாளுடைய பெருமை எல்லோருக்கும் விளங்கிற்று. இல்லையென்றால், தெரியமுடியுமா? பக்கத்து வீட்டுக்காரிக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தால்தான், என் மனைவியை ஈனமான வேலைகளுக்குப் போகச் சொன்னேன். என்னே, என் மனைவியின் பரித் தியாகம்! அவளையும், அவளுடைய கணவனான என்னையும் பாராட்டுங்கள், இனி மேலாவது,

இப்படிக்கு,
கெட்டுப்போனவளின் கணவன்.

……………………

*

"தோழா! அவசரமாகத்தேவை, ஒரு அரைலட்சம் நோட்டீஸ். இந்தா, மேட்டர்! இன்று மாலைக்குள் வேண்டும்!!" என்று வந்ததும் வராததுமாய், வீசினான், வீரன். அவனைப் பார்த்து, எத்தனையோ மாதங்களாயிற்று! எவ்வளவோ விஷயங்களிருக்கின்றன—எனக்கும், அவனுக்கும்—பேச!! அவன் பேசவிட்டால்தானே? 'ஊம்… ஊம்…' என்று அவசரப்படுத்தினான். கொடுத்த 'மேட்டரை' படித்தேன்—நீங்களும்தான் படித்திருப்பீர்கள், மேலே! என்ன கூறுவீர்கள், இப்படிப்பொரு நோட்டீஸை, நண்பனே கொண்டுவந்து கொடுத்தால்! திகைத்தேன்—'வீரா, இதென்ன வேடிக்கை!' என்றேன்.

"வேடிக்கையல்லப்பா, உண்மை! அவசரமாகத் தேவை. அச்சடித்துக் கொடு" என்றான்.

'இதையா!"

"ஆமாம்!!"

"எப்படி, அச்சடிப்பது!"

"எழுத்தைக் கோர்த்து, இயந்திரத்தில் வைத்தால், அச்சடித்துக் கொடுத்துவிடுகிறது"

'அது, தெரியுமப்பா! ஆனால், பார்ப்போர் என்ன நினைப்பார்கள். பிறர் நினைப்பதைப்பற்றி உனக்கு அக்கரையில்லையென்றாலும் உன்னுடைய நண்பனான என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள். என்னை, எதுவேண்டுமானாலும் நினைத்துக்கொண்டு போகட்டும்—இப்படியொரு 'நோட்டீஸை' அச்சடித்துக் கொடுத்த என்னுடைய ஆபீசைப்பற்றி, பிறர், என்ன எண்ணுவார்கள்? செச்சே! அசிங்கம்! அநாகரீகம்!! எனிப் படிப்போகிறதோ, உன் மூளை" என்றேன்.

"சரி! உன் 'பிரஸ்' பெயரைப் போடாமல் அச்சடித்துக் கொடேன்!!" என்றான்.

என்ன செய்வது! என் ஆருயிர்த் தோழன்! இப்படியொரு, பிட் நோட்டீஸ் கேட்கிறான். சிக்கலான, நிலை. 'நீ, அடித்துக் கொடாவிடில், போ!" என்று வேறு கூவுகிறான். சிந்தித்தபடியே, மேட்டரை எடுத்தேன்.

"என்ன வீரா! கடைசியில் புள்ளி போட்டு விட்டிருக்கிறாயே… அங்கு உன் பெயர்தானே இருக்க வேண்டும்?" என்றேன், குழப்பத்தோடு.

சி. என். ஏ. தீட்டிய

சொர்க்கவாசல்

திரைக்கதை, வசனம்

பாலு பிரதர்சாரின்
மூவர்ண அட்டை

விலை அணா 8

விற்பனையாளர் கழிவு 40%
தனிப் புத்தகத்திற்கு
0 அணா தபால் தலை அனுப்பவும்

இதன் முழு உரிமையும் நாங்கள் பெற்றிருப்பதால், யாரும் இதனை வெளியிடக்கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சி மணிமொழியார்,
உரிமையாளர்,
பகுத்தறிவுப் பாசறை,
147, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

ஓங்கி வைத்தான், ஒரு அடி, என் முதுகில்! "முட்டாள்! என்னையா, அப்படிப்பட்ட இளிச்சவாயன், என்றெண்ணினாய்?" என்றான்,

"பின், யாரடா, அந்த ஏமாளி!"

"நேரில், காட்டுகிறேன், வருகிறாயா?"

"எங்கே?"

"சென்னை கீழ்ப்பாக்கத்துக்கு!"

"பித்தனே, அந்த ஆள். இருப்பது பைத்யக்கார ஆஸ்பத்திரியிலேவா?"

"இல்லையப்பா! பெரியதோர் மாளிகையில்!"

"என்ன?"

"உடைந்துபோன மிஷின்—உதவாக்கரை டைப்—இங்கி, இல்லாத பேனா — இத்யாதி வைபவங்களுடன் நீயும் இருக்கிறாயே, பத்திரிகை ஆபீசில்! அந்த ஆளுடைய ஆபீசை வந்து பார்! அடடா, மிஷினை, இரண்டுலட்சம் பெறும்"

"மிஷினுக்கும் இந்த நோடீசுக்கும் என்ன சம்பந்தம்?"

"அந்த ஆள் நடத்தும் பத்திரிகையிருக்கிறதே, அதன் 23-ந்தேதிய இதழைப் பார்த்தாயோ?"

"என்ன பத்திரிகை!"

"கல்கி!"

*

"திராவிடக்கழகத்தார் இப்போது ஸ்ரீ காமராஜரின்மந்திரிசபையைஉற்சாகமாக ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள்! இந்த அதிசயம் எவ்விதம் நேர்ந்தது?

ராஜாஜி ஒரு புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து. அதற்கு எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தீவிரமாக நடந்து, ஸ்ரீ காமராஜரின் மந்திரி சபை அத்திட்டத்தைக் கைவிட்டதனால் திராவிடக் கழகத்தாரின் ஆசியும் ஆதரவும் புதிய மந்திரி சபைக்குக் கிடைத்திருக்கிறது!

ஆகவே. ராஜாஜி தாம் முதன் மந்திரியாயிருந்தபோது காங்கிரசுக்குத் தொண்டு செய்து அந்த ஸ்தாபனத்தைப் பலடபடுத்த முயன்றதுமல்லாமல், தமக்குப் பின்னால் காங்கிரஸுக்குப் பலம் சேர்வதற்கும் ஏற்பாடு செய்துவிட்டுப் போனதாக ஏற்படுகிறது.

இதை உத்தேசிக்கும்போது ராஜாஜி கல்வித் திட்டம்போன்ற இன்னும் நாலைந்து திட்டங்களை வெளியிட்டிருக்கக்கூடாதா என்று தோன்றுகிறது.

அப்படிச் செய்திருந்தால், புதிய மந்திரிசபை அத்திட்டங்களைவிட்டுக் காங்கிரஸ் எதிரிகளின் ஆதரவை நெடுகிலும் தேடிப் பெறுவதற்கு ஒத்தாசையாயிருக்கும் அல்லவா? அடுத்த பொதுத் தேர்தல்வரையில் இம்மாதிரி கைவிட்டுக்கொண்டே போய்க் காங்கிரசுக்கு எதிர்ப்பே இல்லாமல் செய்துவிட எவ்வளவு சௌகரியமாக இருந்திருக்கும்?"

*

"பார்த்தாயா?" என்றான், வீரன்.

"வாலறுந்த நரி ஊளையிடுகிறது" என்றேன், நான்.

"ஊளையல்லப்பா, அது! உள்ளத்திலே புகைந்துகொண்டிருக்கும், எரிமலையின் சின்னம். புதிய கல்வித்

ஜூன் 19, 20 வட ஆற்காடு மாவட்ட மாநாடுகள்

சமூக சீர்திருத்த மாநாட்டுத் தலைவர்

தோழர் ஈழத்து அடிகள் பி. ஏ.

திறப்பாளர்: **தோழர் இரா. நெடுஞ்செழியன்** எம். ஏ.

அரசியல் மாநாட்டுத் தலைவர்

தோழர் கே. ஏ. மதியழகன் B. A. Hons

திறப்பாளர்: **தோழர் சி. மனோகரன்**

ஓவியக் கண்காட்சித் திறப்பாளர்:

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

இரண்டு நாட்களிலும் எஸ். எஸ் இராஜேந்திரன் குழுவினரால்

அம்மையப்பன், சந்திரமோகன்

நாடகங்கள் நடைபெறும்.

இரண்டு நாட்களிலும் பொதுச் செயலாளர் சி என். ஏ. மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் பலரும் கலந்து கொள்வர்.

வரவேற்புக்குழு.

திட்டத்தை காமராஜர் கைகழுவி யதைக் கண்டிக்க வந்த ஏடு, எங்கே போய் கைவைக்கிறதென்று பார்த்தாயா? திராவிட கழகத்தார், ஆதரவு தருவதாகச் சொல்லிவிட்டார்களாம், காமராஜருக்கு! அது, பொறுக்கமுடியவில்லை, கல்கிக்கு. உனக்கு ஒன்று ஞாபகமிருக்கிறதோ? இன்று காமராஜ் மந்திரி சபைக்குத் தன்னுடைய ஆதரவை அளிக்க முன்வந்த பெரியார் அவர்கள், ஆச்சாரியார் மந்திரி சபையையும் பாராட்டி வரவேற்றது!"

"சென்னைக் கூட்டத்தில், பெரியாரே வெளியிட்டிருக்கிறாரே!"

"அப்போது உள்ளம் மகிழ்ந்தது கல்கி! இப்போது எரிமலையாகிறது; ஏன்?"

"ஏன்? அதுதான் புரியவில்லை; எனக்கு"

"கல்கிமட்டுமல்ல காமராஜர் மந்திரி சபைக்கு, நாம் ஆதரவு காட்டுவதுபற்றி 'கம்யூனிஸ்டு' ஏடுகூட கதறியிருக்கிறதே; கண்டாயே?"

"ஆமாம்! கண்டேன்"

"என்ன எழுதுகிறது, அது"

"காமராஜ் வந்ததால், ஆட்சி முறை எதுவும் மாறிவிடவில்லை. பழைய பெத்தான்தான் – என்ற தோரணையில் எழுதியிருக்கிறது. ஏன், வீரா! உண்மைதானே அது"

"உண்மை! சரியப்பா! ஆனால், இந்தக் கம்யூனிஸ்டுகள், இதை எடுத்து மக்களிடம் கூறுவதற்குப் பதில், நம்மைப்பற்றிப் பாய்வதற்கு ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவதைப் பார்த்தாயோ?"

"ஆமாம் வீரா! அது தொனிக்கிறது, எழுத்தில்!! ஆனால், அவர்கள் கூறுவது உண்மையில்லையா? நாம் காங்கிரசாட்சிக்கு, வரவேற்புரை வழங்கலாமா!"

"திருத்திக்கொள்-காங்கிரஸ் ஆட்சிக்கு அல்ல; காமராஜ் ஆட்சிக்கு!"

"புரியவில்லையே நீ சொல்வது"

"புரியும்படி சொல்லட்டுமா? காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறதென்றால், காங்கிரசின் ஏடுகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் 'கல்கி' இப்படி எழுதுமா – 'மித்திரன்' மித்ரபேத வேலைகளில் இறங்குமா —'இந்து' இருட்டடிக்குமா – அந்த வட்டாரமுழுமையும் எரிச்சலோடு காமராஜைப் பார்க்குமா? அவைகளே காமராஜர் ஆட்சியை, காங்கிரஸ் ஆட்சி என்று நினைக்கவில்லையே! கவிழ்க்கத்தானே சமயம் பார்க்கின்றன!"

"அவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன?"—இப்படி கம்யூனிஸ்டுகள் கேட்டால்......?"

"நீயே, கேள்! எத்தனை முறை இந்த கம்யூனிஸ்டுகள், 'நேருவின் கையைப்பலப்படுத்துவோம்' என்று முழக்கமிட்டிருக்கிறார்கள் – மறந்துவிட்டாயா? அப்படிச் சொன்னதால், கட்சியைக் கலைத்துவிட்டு, காங்கிரசோடு ஐக்யமாகியாவிட்டார்கள்!"

"சரிதான், நீ சொல்வது"

"ஆதரிப்பது என்பதற்கு பல பொருள் உண்டு. காலிகள் விரட்டும்போது, வீட்டிற்குள் ஓடிவருகிறான் உன் சகோதரன்! வீடு, உன்னுடையது. சகோதரனுக்கும் உனக்கும் சண்டை, பேசுவதுகூட இல்லை. என்ன செய்வாய், அப்போது? விரட்டி அடிப்பாயா காலிகளை — அல்லது சகோதரனுக்கு ஆதரவளிக்க மறுப்பாயா!"

"செச்சே! மாட்டேன்......"

"அதுபோலத்தான், இதுவும்! காமராஜ், தீ மத்தியிலிருக்கிறார்–சகோதர பாசம், கைகொடுப்போம்! பரிசு, அடி! உதை! என்றால் பெறுவோம். மாற்றானின் அடியைவிட, சகோதரன் தரும் அடி உதையால், உலகின் கண்முன் உண்மை, வெகு எளிதில் புலப்படுமல்லவா?"

"உண்மைதான்!"

"நீ, சொல்லி விட்டாய்! ஆனால் 'கல்கி' கள், என்ன கூறுகிறார்கள், தெரியுமா?"

"என்ன கூறுகிறார்கள்!"

"காமராஜ், புதியகல்வித் திட்டத்தைக் கைவிட்டு, நம் வெற்றிக் கூட்டம் நடத்தும் வாய்ப்பை அளித்துவிட்டாராம். நாமும், மகத்தான சாதனையென்று சொல்லி, கொண்டாடுகிறோமாம்—இதனை எழுதும், கல்கி, கிண்டலாக எழுதுகிறது, 'அவர்களுடைய சாதனைகளைக் குறித்து கொண்டாடுவதற்கு இல்லை. ஆகையால் இதையாவது கொண்டாடலாமே என்று கொண்டாடுகிறார்கள். அவர்கள்வேறு, எதைக் கொண்டாடுவார்கள்!'– கேட்கிறது, கல்கி, வேறு எதைக் கொண்டாடுவார்கள், என்று!"

"என்ன, கிண்டல்?"

"ஆத்திரப்படாதே! நாம், இதைவிட வேறு எதைக் கொண்டாடுவோம் — என்னென்ன கஷ்டநஷ்டமடைந்திருக்கிறோம்! இதைவிட—என்கிறாரே, கல்கி, மிகவும் சாதாரணமாக. இந்த சாதாரண விஷயத்துக்காக, இவர்து குருநாதர், எவ்வளவு பிடிவாதம் காட்டினார்? அந்த மேதையின் பிடிவாதத்தை—ஆண்டவன் சீடரின் அற்புதத்தை—அகிலஉலக சிற்பியின் ஆட்சியை—அகற்றியிருக்கிறோமே, நாம் இதைவிட, வேறெதைக் கொண்டாடுவோம்! ஒழிந்தது சனியன்!–என்று இன்பம் எழும்புகிறதே, இன்று. இதைவிட வேறு எதை நாம், கொண்டாடவேண்டும்!"

"ஆமாம்! ஆமாம்!! கேட்டாயே பிட் நோட்டீஸ்—பிரிண்ட் பண்ணச் சொலட்டுமா?"

"வேண்டாம்! உன், ஏட்டிலேயே போட்டுவிடு. எட்டும், அவருக்கு! கொட்டும் உள்ளத்தை! குள்ளநரிக் கூட்டத்தைச் சிந்திக்கச்செய்தாலும் செய்யும்!"

★

அறிவிப்பு

"பொன்னொளி" "பவழ பம்பம்" என்ற இரண்டு நூல்களின் விற்பனை உரிமை கீழ்க்குறிப்பிடும் விலாசத்தாருக்கு அளிக்கப்பட்டு விட்டதால், மேற்படி புத்தகங்கள் தேவைப்படுவோர் பரிமளம் பதிப்பகத்துக்கு எழுதாமல், இனிமேல் கீழ்க்கண்டமுக வரிக்கே எழுதிப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பரிமளம் பதிப்பகத்தார்

புத்தகங்கள் கிடைக்குமிடம்:–

G. N. சாமி,
183, மவுண்ட்ரோட்,
சென்னை–2

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 30—5—54 [ஞாயிறு

சாவி, இல்லையாம்!

★

மந்தமாருதம் வீசும், அங்கே! மனைவியும் நானும் நின்றால், சந்திரனை எட்டிப் பிடிக்கமுடியும்! சந்தனக் கட்டிலுண்டு! பளிங்குக்கல், மேஜை! பரிமளமான வாழ்வுபெறலாம்! பெரிய மாளிகை! பிரியத்துக்கேற்ற இடம்! ஆனால், பெரிய பூட்டு போட்டுப்பூட்டியிருக்கிறார்கள். மாளிகையை அண்ணாந்து பார்க்கிறேன். நுழையமுடியவில்லை! ஏனெனில், சாவி இல்லை, என்னிடம்!'—என்று சஞ்சலத்தோடு தெரிவிக்கிறார், சிந்தாமணி தேஷ்முக்.

கையே தலையணையாய் தரையே கட்டிலாய், வானமே கூரையாய், மழை பெய்தாலும், வெய்யில் கொளுத்தினாலும், சாவு தாக்கினாலும், காதல் தீண்டினாலும், வீதியோரமே மாளிகை என்று கிடக்கிறார்களல்லவா, ஏழை மக்கள்—அவர்களையெல்லாம், அற்புதம் நிரம்பிய மாளிகைக்கு அழைத்துச் செல்லவேண்டுமெனும் ஆசையிருக்கிறதாம், அவருக்கு! எண்ணுவதெல்லாம் எண்ணுகிறாராம், தினந்தோறும். ஆனால், அந்த எழில் மிகு மாளிகைக்குள் நுழைய சாவி இல்லையாம்! சங்கடமாயிருக்கிறதாம்!

தேஷ்முக், டில்லி பீடத்தின் நிதி மந்திரி. சாவி, என்று அவர் குறிப்பிடுவது, பணத்தை! இந்த நாட்டு ஏழைமக்கள் எல்லோரையும் இன்பமாக வாழும்படி செய்யும் ஆசை இருக்கிறதாம்—அந்த ஆசையை ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் நிறைவேற்ற வேண்டுமெனும் ஆர்வமும் இருக்கிறதாம் — ஆனால், பணம் இல்லையாம்! பல்லவி, பாடுகிறார்!!

"உணவு, உடை இரண்டு விஷயத்திலும் ஓரளவு திருப்தி ஏற்பட்டுவிட்டதும், வீடுபற்றி வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென எண்ணுகிறேன். அதிலும்குறிப்பாக வீதியோரங்களிலும், சாக்கடைக் குப்பைகளிலும் கிடந்துழல்வோருக்கு நல்ல வீடுகள் கிடைக்கும்படிச் செய்யவேண்டுமெனக் கருதுகிறேன். ஆனால் அதற்கு, சாவி இல்லை! எப்படிசெய்வதெனும்வழி, தெரியவில்லை!" என்று, அங்கலாய்க்கிறார். சீமான்களின்மடியிலும் பூமான்களின் அன்புத் தொட்டிலிலும், தாலாட்டப்படும் செல்லப் பிள்ளைக்கு, ஏழைகள் படும் துயரம் கவனத்துக்கு வந்ததே பெரிய காரியம்! மகிழ்கிறோம்! ஆனால், நாட்டின் 'பெரிய நிதி' அமைச்சரான இவர், வழி தெரியவில்லை—என்று கூறுவதைக்காண, வியக்கிறோம்.

வீதியை வீடாகக் கொண்டும், மரநிழலையே மாளிகையாக எண்ணியும், நாடோடிகள்போல நலிவோரின் தொகை, உலக முழுமையும் 18 கோடி இருப்பதாக, ஐ. நா. ஸ்தாபனத்தார், கணக்கெடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கில், வீடு என்ற பெயரால், குச்சுக்குள்ளும், பொந்துக்குள்ளும் இருப்போரது எண்ணிக்கை இல்லை! அந்த எண்ணிக்கையையும் கணக்கெடுத்துப் பார்த்தால், உலகத்தில் மிக மிகப் பிற்போக்கான நிலைமையில், இந்திய உபகண்டம் இருப்பது விளங்கும். இங்கே வீடுகளை—சில நகரங்களில்தான் காண்கிறோம்! அந்த வீடுகளிலும், வாடகைக்கு குடியிருப்போர்தான், அதிகம். கிராமங்களிலோ, மண் சுவரும் கீற்று அடைப்பும்தான் ஏழையின் 'வீடுகள்'! மழை பெய்தால் ஓதம் நிரம்பும்—காற்று அடித்தால் வீடு ஆகாயத்தில் பறக்கும். நூறு குடிசைகளுக்கு மத்தியில், ஒரு ஓட்டு வில்லை வீட்டைப் பார்ப்பதே அபூர்வம்! இருப்பது, இருபதாம் நூற்றாண்டு—விண்ணை முட்டும் மாளிகைகளைப்பற்றியும், கண்ணுக்கெட்டாத கவர்ச்சிகரமான கட்டிடங்களைப்பற்றியும் கேள்விப்படுகிறோம். ஆனால், காண்பதோ குடிசை! இருப்பதோ இரவல் வீட்டில்!!

இரண்டொரு தினங்களுக்கு முன்பு, கல்கத்தா நகரைக் காண வந்த அமெரிக்கர் சிலர், காசுகளை வீசியெறிந்து, அதனைப்பொறுக்க 'அடிபிடி' நடத்தும் ஏழைகள் கூட்டத்தைப்படம் பிடித்தனராம்! அவர்கள் படம் பிடித்ததைக் கண்ட, கல்கத்தா வாலிபர்களில் சிலர், அந்நியரிடம் சென்று, சண்டை போட்டு, அவர்கள் எடுத்த படங்களைத் திரும்ப வாங்கிக்கொண்டனராம்!! பாரதமாதாவின் மடியில் வாழும் மக்களின் இழிநிலை, எல்லா நாடுகளுக்கும் எட்டி விடக்கூடாதே என்னும், கவலையிலே அந்த அன்பர்கள், பாய்ந்து சென்று, படங்களைக் கைப்பற்றி இருக்கிறார்கள். வாலிபர்களின் உள்ளம் பாராட்டுக்குரியதுதான்! ஆனால், 'ரோஜாப்பூக்கொண்டையாம் உள்ளே இருக்குமாம், ஈரும், பேனும்!!' என்பதுபோல, பாரதத்தின் பண்பாட்டை விளக்க, பிறர் கண்ணுக்கு வேதனைகள் தென்படாமலிருக்க, இதுபோல 'உண்மைகளை' மறைத்துக்கொண்டே இருந்திடமுடியுமா? வாலிபர்கள் செய்தார்கள்! ஆனால், அந்த வாலிபர்களுக்கு உணர்ச்சி ஊட்டியது யார்? ஆள்வோர்தானே! அகில உலகிலும் இந்தியாவின் ஜோதி ஜொலிப்பதாக வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் டில்லிக்கூட்டம், 'நம்முடைய பிரச்னைகளை, நாம் மறைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், இந்தியாவை பற்றி எல்லா நாடுகளும் பெருமையாகக் கருதுகின்றன. அந்தப்பெருமைக்குப்பங்கம் வருவதுபோல் நாம் நடந்துகொள்ளக்கூடாது" என்று வீண்ஜம்பத்துக்காக உண்மைகளை மறைக்கின்றனர்! தலைவர்களின் பேச்சு, வாலிபர்களை, கோபம் கொள்ளச் செய்கிறது — எங்கே,

இந்தியாவின் பெருமையை அந்தப் படங்கள் குலைத்துவிடுமோ, என்று ஓடுகிறார்கள்! பிடுங்குகிறார்கள்!!

இவ்வண்ணம், வீட்டிற்குள் வேதனையை வைத்துக்கொண்டு, வெளியில் டமாரம் அடித்துக்கொண்டிருப்பதால், என்ன பயன்? தேஷ்முக், அண்மையில், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொண்டார். இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் உள்ள வியாபாரத் தொடர்பு— ராஜீய உறவு — இப்படி பற்பல, விஷயங்களில், குலவிக்கொண்டனர். நிமிர்ந்த மார்புடன்தான், படங்களிலும் காட்சி அளிக்கிறார்! ஆனால், அவ்வண்ணம் மாபெரும் உபகண்டத்தின் பிரதிநிதியாக பங்குகொள்ளுகிறோம், என்று பெருமிதத்தோடு நிற்பவர், கல்கத்தா வீதிகளையும் பம்பாய் நகரினையும் சென்னை சிந்தாதிரிப்பேட்டையையும் ஒரு நிமிடம் நினைத்துப்பார்த்தால், எப்படியிருந்திருக்கும்! ஸ்விட்சர்லாந்திலே உள்ள மாளிகையின் வனப்பில் மகிழ்ந்திடும் விசயலட்சுமியோ, லண்டனில் புதுக் கட்டிடம் வாங்கிடக்கூறும் கிருஷ்ணமேனனோ, அமெரிக்க நகர்களின் அதியற்புத அழகைக் காணும் மேதாவோ, ஆங்காங்கேயிருக்கும் போது, தன்னுடைய சொந்த நாட்டை ஒப்பிட்டுப்பார்த்தால் எப்படியிருக்கும்?

அவர்களுக்கு வரும் வருமானத்தைக் கணக்கிடவே நேரமில்லை— விட்டுவிடுவோம், அவர்களை. இந்த நாட்டுக்கு வந்து சென்ற வெள்ளையன், பீவர்லி நிகோலஸ் என்ன சொன்னான்? பொந்துகள் என்றான் —நாம் வீடுகள் என்று சொல்லுமிடங்களை! கவனித்தோமா? வீதிகளுக்கு எந்தத் தலைவருடைய பெயரை வைக்கலாம், எனக்கு வேண்டியவர் பெயரையா! உனக்கு வேண்டியவர் பெயரையா! என்கிற 'குருக்ஷேத்திரம்', நடத்த முன்னணியில் நின்றனரேயொழிய, விழியில் அனுதாபத்தோடு, வீதி வாழ்வோருக்கு வாழ்வளிக்க முன்வந்தோர் யார்?

சாவி இல்லை' என்கிறார், தேஷ்முக். ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் வரும்போது—சாவி தென்படாமற் போகிறது, தார்க்காபாய் தோழருக்கு. இன்பமான கட்டிடம் தென்படுகிறதாம்! அதற்கு, பணம் இல்லையாம்!!

ஏழைகள், கிராம மக்கள் இவர்கள் விஷயத்தில், இந்தப் பல்லவி வருகிறதே—இதோ! பல பணக்காரர்கள் ஒன்று சேர்ந்து, நகர அபிவிருத்தி என்ற பெயரால், இருபதினாயிரத்துக்கும் முப்பதினாயிரத்துக்கும், வீடுகள் கட்டி, முப்பதாண்டு நாற்பதாண்டு என்ற காலவரையறைக்குள் கடனைத் திருப்புவதாக எழுதிக் கொடுத்துவிட்டு, ஆளுக்கோர் அழகான வீடுகளை உரிமையாக்கிக் கொள்கிறார்களே —இதற்கு மட்டும், எங்கேயிருந்து, வந்தது, சாவி! பல முக்கியநகரங்களில் பார்க்கிறோம்- தரிசாகக்கிடந்த பூமியிலெல்லாம் அழகுள்ள பலகட்டிடங்களாக முளைக்கின்றன. அவைகளில், ஆலைத் தொழிலாளியும், பாடுபடும் பாட்டாளியும், அல்ல; வசதி நிறைந்தோர் வாழ்கிறார்கள்!

அந்தப் 'பாக்யம்' ஏன் ஏழைமக்களுக்குக் கிடைக்கக்கூடாது? மாடி பெரிதாகவோ, மந்தமாருதம் வீசும் தோட்டத்தின் அருகிலோ கூட இருக்கவேண்டாம். வீதிக்குப்பதில் ஒரு வீடு! சந்துமுனைக்குப் பதில், ஒரு பொந்து!!—ஏன், கட்டித்தரக் கூடாது? கிராமங்களில் உழைத்து வாழ்கிறார்களே, உழவர் பெருமக்கள், அவர்களது சேரிகளைச்சென்று பார்த்தால், தேள் ஒரு பக்கம் ஓடும் நரி மற்றோர் பக்கம் ஊளையிடும், வாய்க்காலில் தண்ணீர் நிறைந்தால் குடிசையெல்லாம் சேறாகும். இவ்விதம், வீதியில் அலைவோர், வீடில்லாதோர், வேதனையில் கிடப்போர், என்று நாட்டு மக்களில் பெரும்பாலோர், நலிகிறார்கள்! இந்த நலிவைப் போக்க, ஆசை இருக்கிறது! ஆனால், சாவி இல்லை!!—என்கிறார் தேஷ்முக்.

சாவி இருக்கிறது! ஒருவேளை, அவருடைய கண்ணுக்கு அது தெரியாவிட்டாலும், சுட்டிக்காட்டுகிறோம். நாட்டிலே, செல்வம், உண்டு. ஆனால், அது நரிகள் வசம் குவிந்துகிடக்கிறது. ஆயிரம் ஏகர், வைரமூக்குத்தி, வெள்ளிரதம், தங்க வாகனம், என்ற அளவில், இந்நாட்டின் கோயில்களிலே முடங்கிக்கிடக்கும் செல்வம், கொஞ்சநஞ்சமல்ல! ஆண்டுதோறும் அவைகளுக்குக் குவியும் வருமானமும் சாதாரணமானதல்ல!! அவைகளை எடுத்து, ஆங்காங்கும் இந்த நற்பணிக்கு பயன்படுத்தினால், ஆண்டவன் சண்டைக்கா வருவார்? வந்தால், கெஞ்சிக்கேட்போம்! 'இல்லை; எனக்கு, அக்காரவடிசலும், ஆமைவடையும், அனுமாரும் ஆட்டுக்கிடாவும்தான் வேண்டும்' என்றால் விட்டுவிடுவோம்.

இதோ! இந்திய 'சர்க்காரின் தேசியத் திட்டக் கடனுக்காக பண்டித நேரு, தமது வீட்டிலிருந்த ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்களைக் கொடுத்தாராம். வட்டியுண்டு, தொகைக்கு! இவ்விதம், ஒரு கடன் எழுப்பி, அந்தக் கடனுக்கு, கோயில் வருமானத்தையும் சொத்தையும் பயன்படுத்தி, அதைக்கொண்டு வீடுகள் கட்டலாமே!! ஆண்டவன், 'கேஸ்' போட்டுக் கேட்டால், வட்டியுடன் கடனைத் தீர்த்துவிடுவோம்.

ஆண்டவனின், குழந்தைகளன்றோ, மக்கள்? அவர்களில் சிலர் மாடியிலும், பலர் தெருக்கோடியிலும்; வாழ்வது! அக்கிரமமன்றோ? அவர்களையும் மனிதராக வாழச்செய்து, நாட்டில் இன்பம் அரும்பச் செய்ய வேண்டுவது, அரசின் பொறுப்பு. ஆகாய விமானங்கள் வீசிய குண்டுகளால், சுடுகாடாகிப் போய் கிடந்த பலகிராமங்களையும் நகரங்களையும், மீண்டும் பன்மடங்கு புதுப்பித்துள்ளனராம், ரஷ்யர்கள்! அங்கு மட்டுமல்ல, லண்டன் — பெர்லின் போன்ற இடங்களிலும், இடிந்த இடங்கள், மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன!! அவர்கள் எல்லாம், அவ்விதம் காரியங்களைச் சாதிக்கும் போது, புயல் சூழாத நாட்டில் வாழும், நம்மால் முடியாதா? முடியும்! அதற்கு ஆசையிருந்துவிட்டால் மட்டும் போதாது— துணிவும் ஆர்வமும் வேண்டும். அதுதான் பஞ்சமாயிருக்கிறதே ஒழிய, சாவி அல்ல!!

★

அமைந்த பாதை

பவானன்





கார் ஓட்டினன்

“மாதச் சம்பளம் நாற்பது ரூபாயா?”

நாற்பது ரூபாய்க்கு, தான் பொறுமானமுள்ளவனு என்று சிந்திக்க ஆரம்பித்துவிட்டான் ஆறுமுகம்.

அதை நினைத்துக் கொண்டே வலப்பக்கம் இருந்த அறைக்குள் போனன்.

அங்கே ஆணியில் கார்ஷெட் சாவியும், கார் சாவியும் மாட்டியிருந்தன. அவைகளை எடுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த மரப் பெட்டியைத்திறந்தான்.

அதில் எழெட்டு ஜோடி காக்கிச் சட்டைகளும், கால்சட்டைகளும் கிடந்தன. பக்கத்திலே ஒரு தொப்பி மாட்டப்பட்டிருந்தது.

ஒரு செட் டிரஸ் எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

“கார்ஷெட், இந்தபக்கம் இருக்கு ஆறுமுகம்!” என்ற குரல் கேட்டுத் திரும்பி பார்த்தான்.

தோட்டத்திலிருந்து குப்பன் வந்து கொண்டிருந்தான்.

“நீ எப்பப்பா, கார் ஓட்டக் கத்துக்கிட்டே. மாரி மகனுனும், மகா அதிர்ஷ்டக் காரனப்பா, நீ. சின்ன எஜமான்தான் கோபக்காரரு மற்றபடி, இங்கே உனக்கு ஒரு தொந்திரவுமில்லே!” என்று கூறிக்கொண்டு முன்னல் நடந்தான் குப்பன். ஆறுமுகம் பின்தொடர்ந்தான்.

“ஏன், சின்ன எஜமான் வீணு கோபிச்சுக்குவாரா.........” என்றான் ஆறுமுகம்.

“வீணு என்ன! முன்கோபக்காரரு. அவ்வளவுதான்” என்றான் குப்பன்.

மேலும் பேசுவதற்குள் கார்ஷெட்டிற்கு வந்துவிட்டனர் குப்பனும் ஆறுமுகமும். முன்னல் போய் ஷெட்டைத் திறந்தான் ஆறுமுகம்.

கார் ஷெட்டைத் திறந்ததும் ஆறுமுகத்திற்குத் திடீரென்று ஒரு ஆவல் பிறந்தது. குப்பன் ஒருவனிடம்தான் அதை கேட்டுப் பதில் பெற முடியும்.

“குப்ப, இந்தக்காரை இதுக்கு முன்னலே யாருப்பா ஓட்டிக்கிட்டு இருந்தாங்க?......” என்றான். ஒரேயடியாக நீண்டு ஒளிவிட்டு நின்ற அந்தப் பூக் காரைப் பார்த்ததும் அந்த கேள்வியைக் கேட்க வேண்டும் என்று தோன்றியது ஆறுமுகத்திற்கு.

“அதுவா, ஆறுமுகம்! அதுதான் ஒன்னும் புரியலே. முன்னே பழனி இன்னு ஒரு டிரைவர்

இருந்தாரு அவர் மில்லிலே இருந்தவர்; இங்கேவந்து ஒரு வருஷமாக இருந்தார். ஆனால் என்னமோ திடீரென்று பத்துநாளைக்கு முன் நின்னுட்டாரு. ஏன்னு விசாரிச்சா, மில்லிலே என்னமோ ஸ்ட்ரைக்காம், அதற்குன்னு பழனியும் போயிட்டாருன்னு சொன்னாங்க. என்னமோ எனக்கு ஒன்றும் புரியலே. மானேஜர் மாத்திரம் என்னமோ சத்தம் போட்டுக்கிட்டே இருந்தார்'' என்றான், குப்பன்.

அவன் கூறியது ஆறுமுகத்திற்கும் புரியவில்லை. ஆனால் அவனுக்கு வேண்டியது இதற்கு முன் இந்த காரைப் பழனி என்பவன் ஓட்டினான் என்பதுதான். அதோடு திருப்தியடைந்துவிட்டான் ஆறுமுகம்.

"அந்தப் பங்களாவின் பின்புறத்திலேதான் நான் படுத்துகிட்டு இருப்பேன். எப்போ வேணுமுன்னாலும் கூப்பிடப்பா'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் குப்பன்.

இந்தக் குப்பனிடம் என் உதவிக்குப் போகப் போகிறோம் என்று பேசாமல் தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான் ஆறுமுகம்.

குப்பன் போய் அரை மணிக்கெல்லாம் ஜம்மென்று காக்கி யூனிபாரத்திலே தலையிலே குல்லாய் வைத்துக்கொண்டு காரை ஓட்டிக்கொண்டுவந்து முன் வாயிலில் நிறுத்தினான் ஆறுமுகம்!

அப்பொழுது மணி 8½ தானிருக்கும். ஆகவே இன்னும் நீண்ட நேரம்வரை தனக்கு ஓய்வுதான் என்று எண்ணி வராந்தாவிற்கு வந்து சாய்ந்துகொண்டு உட்கார்ந்தான்.

காலையில் உள்ளே நுழைந்தபோது இருந்த பயம் இப்போது இல்லை அவனுக்கு. ஆனாலும் முதலாளி எப்படியோ, சின்னமுதலாளி எப்படியோ, அம்மா எப்படியோ என்ற யோசனையில் இறங்கிவிட்டான். இடையிடையே மானேஜர் கூறிய புத்திமதிகளும், முதல் நாள் இரவு அவன் தாய் கூறிய வார்த்தைகளும் அவன் சிந்தனையில் வந்து தட்டின.

மொத்தத்தில் அவனால் எதையும் சிந்தித்து முடிவு கட்ட முடியவில்லை. பயம், அச்சம். ஆவல் எல்லாம் கலந்து அவன் ரத்த ஓட்டம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

சாதாரணமாகப்பாக்யபவனத்தை பார்க்கும் யாவரும் இதில் யாரும் குடியிருப்பதாக ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இந்த மாதிரி நிசப்தமான நிலைக்கும் அவன் வாழும் உத்தமநாதபுரத்திற்கும் நேர் எதிரான மாறுதல் இருப்பது அவன் கவனத்திற்கு வந்தது.

உத்தமநாதபுரத்திலே இரவு 12 மணிவரை கூடக் கூச்சல் கேட்டபடிதானிருக்கும். தாய்க்கும் மகளுக்கும் சண்டை. அண்ணனுக்கும் தம்பிக்கும் போராட்டம். மனைவிக்கும் மணாளனுக்கும் எப்போதும் சச்சரவு. எந்த நேரத்திலும் ஏதாவதொரு சண்டை. மட்டரகமான சொற்போர்கள். அவர்கள் பாஷையே அலாதியானது. மாளிகைவாசிகள் காது கொடுத்துக் கேட்க முடியாதவை. மற்றவர்கள் மனதைப் புண்படுத்தக்கூடியவை.

ஆறுமுகத்தின் காதிலே சேரியின் காட்டுக் கூச்சல் எதிரொலித்தது.

அப்படியே அண்ணாந்தவண்ணம் உட்கார்ந்திருந்தான்.

சில நிமிடங்களில் அவன் சிந்தனையைக் கலைத்தது. வலதுபக்கத்திலே ஏற்பட்ட வளை ஒலி!

திடுக்கிட்டுத் திரும்பினான் ஆறுமுகம். மாடிப்படிகளில் புஷ்பா இறங்கி வந்துகொண்டிருந்தாள்!

பயந்து எழுந்து நின்றான்.

அவளும் அந்தப் புதிய உருவத்தை அப்பொழுதுதான் பார்த்தாள். 'நீ யாரப்பா?'' என்று கேட்கும் தோரணையில் அவள் பார்வை இருந்தது. சில வினாடிகள் படபடத்த இருதயத்துடன் அவளை நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தான், ஆறுமுகம்.

படிகளில் இறங்கி வாயிற்படிவழியாக முன் ஹாலில் நுழைந்து, அங்கிருந்த சோபாவில் அமர்ந்து, அருகில்கிடந்த பேப்பரைஎடுத்துப் படிக்க ஆரம்பித்தாள் புஷ்பா

அதுவரை அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் ஆறுமுகம்.

'ஒல்லியான சரீரம். ஆனால் ஒளியுள்ள கண்கள்! சிவந்த மேனி. சிங்காரப் புன்னகை. மேலே பட்டால் நெய்த அழகிய தாவணி. காலிலே தங்கம்போல மின்னிய செருப்பு'' இவைகள் அவ்வளவையும் ஒரே நொடியில் கண்டான் ஆறுமுகம்.

செங்கமலமும், பொன்னியும் தான் அவன் கவனித்த இளம் பெண்கள். ஆனால் அவர்களுக்கும் இவளுக்கும் அவன் கண்ட வேற்றுமைகள் எவ்வளவு!

பொன்னியின் உடல் உரலைப் போல ஒரே கெட்டியானது. அவள் நிமிர்ந்து நின்றால் குஸ்திச் சண்டை போடவரும் போட்டிப் பயில்வானைப் போலிருப்பாள். விளையாட்டாக அவன் கன்னத்தைப் பொன்னி எப்போதாவது கிள்ளினால் கூட "ஐயோ, பரதேவதே! நீ கொஞ்சம் எட்டியே இருந்து விளையாடம்மா! சதையைப் பிடுங்கி எடுத்திடுவே போலிருக்கே'' என்பான், அந்த வலி பொறுக்காமல்—ஆனால் அதை ரசித்தவண்ணமே!

புஷ்பாவின் தோற்றமோ அவன் இதுவரை கண்டிராததாயிருந்தது. ரோடிலே வெறுங்காலோடு நடந்தால் அவள் உடல் பூராவும் ரத்தம் வெளிவரும்போல மென்மையான உடல் அது. இவ்வளவு வசதியிருந்தும் எலும்புமாதிரி அவளிருப்பது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அதைப் பற்றி அதிகம்சிந்திக்கவும் அவனுக்கு நேரம் கொடுக்கவில்லை, அப்பொழுது அதே மாடிப்படி

கடவுள் அல்ல!

வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமன் ஒரு மகாபுருஷன். ஈசுவர அவதாரமாக வைத்து எழுதவில்லை. சில அதிகாரங்களிலும், இங்குமங்கும் சுலோகங்களிலும் தெய்வ அவதார விஷயத்தைச் சொல்லி வந்தாலும், மொத்தத்தில் மேலே சொன்னபடி வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன், வீரபுருஷன். அபூர்வமான தெய்வீக குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுள் அல்ல.

—ஆச்சாரியார்,
'கல்கி' மே 23.

களில் இறங்கிவந்த சின்னமுதலாளி, பாஸ்கர்.

புஷ்பாவைக் கவனித்தது மாதிரியே பாஸ்கரையும் கவனித்தான் ஆறுமுகம். பாஸ்கரும் புஷ்பா மாதிரி ஆறுமுகத்தின் மீது ஒரு பார்வை செலுத்திவிட்டு ஹாலுக்குள் நுழைந்து விட்டார்.

புஷ்பாவைப் போல மெலிந்து இல்லை, பாஸ்கர். கொழுகொழுவென்று, நல்ல வளர்ச்சியோடு இருந்தார். அவர் தலைவாரி இருந்த விதமே ஆறுமுகத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. நீண்ட கால் சட்டை; கையில் ஒரு மூக்குக் கண்ணாடி; காலிலே பூட்ஸ் போட்டுக் கொண்டு சில்க் சட்டை படபடவென்று மின்சாரவிசிறியின் காற்றிலே அடித்துக் கொள்ள ஹாலுக்குள் நுழைந்து புஷ்பாவின் எதிரில் உட்கார்ந்தான், பாஸ்கர்

அவர்களிருவரையும் பார்த்த வண்ணம் அப்படியே நின்றுகொண்டிருந்தான் ஆறுமுகம்.

அவ்வப்போது அவர்கள் ஆங்கிலத்திலே பேசிக் கொள்ளும் சப்தம் காதிலே விழுந்தது. அந்த வார்த்தைகளுக்கு அவனால் அர்த்தம் புரிந்து கொள்ளமுடியவில்லை.

சில நிமிடங்களில் மற்றொரு அறையிலிருந்து மானேஜர் சாம்பு வெளியே வந்தார்.

அவரும் ஆங்கிலத்திலேயே ஏதோ பேசினார். அவர்பேசும் பொழுது அடிக்கடி 'டிரைவர்' என்று கூறுவது மாத்திரம் ஆறுமுகத்தின் காதில் விழுந்தது. மானேஜர் பேசி முடிந்ததும் மூவரும் ஆறுமுகத்தை உற்றுப் பார்த்தனர்.

ஆறுமுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை. அவனும் அவர்களைப் பயத்தோடு பார்த்தான். ஒரு நொடி அவனைப் பார்த்துவிட்டு அவர்கள் வேறு பக்கம் திரும்பிக் கொண்டனர்.

ஆறுமுகமும் வராந்தாவிலிருந்து இறங்கி வந்து படிகளில் உட்கார்ந்து கொண்டான். என்னமோ அவனைப் பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டனர். அவ்வளவுதான் ஆறுமுகத்திற்கு புரிந்தது.

அப்படியே சுமார் பதினைந்து நிமிடங்கள் உட்கார்ந்திருந்தான், ஆறுமுகம். டக்டக் என்று பூட்ஸ் சப்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். பாஸ்கர் வந்து கொண்டிருந்தார். எழுந்து நின்றான்.

பாஸ்கர் நேராக அவனை நோக்கியே வந்தார். பயத்தோடு நகர்ந்து நின்றான். அவரோ அவனருகில் வந்து சட்டென்று கார் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்தார் உடனே ஆறுமுகம் டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்ந்தான்.

முதல் தடவையாக அன்றுதான் ஆறுமுகம் அந்த இடத்திலே கார் ஓட்டப் போகிறான்—அவன் கைகள் படபடத்தன. மெதுவாக சாவியை எடுத்து மாட்டினான்.

"காலேஜுக்கு ஓட்டு...!" என்றார் பாஸ்கர்.

அவனுக்கு காலேஜ் என்ற பதத்திற்கு முழு அர்த்தமும் தெரியவில்லை. செத்த காலேஜா உயிர் காலேஜா என்ற சந்தேகம் கூடவந்தது.

பயத்தோடு திரும்பிப் பார்த்தான். பாஸ்கரும் அவனைப் பார்த்தார், அவனுடைய சந்தேகம் பாஸ்கருக்கு உடனே புரிந்திருக்கத்தான் வேண்டும், பீச்சு தெரியுமா... அங்கேயிருக்கே அந்த காலேஜுக்கு"

உடனே ஆறுமுகத்திற்கு விஷயம் தெரிந்து விட்டது.

"இரும்பு வாராவதிகிட்டே தானுங்களே என்று இழுத்துக் கொண்டே காரை ஸ்டார்ட் பண்ணினான்.

"ஹிம்..." என்று அதட்டலான ஒரு உறுமலை போட்டுவிட்டு சிகரெட் பற்றவைத்தார், பாஸ்கர்.

ஆறுமுகத்திற்குக் குப்பன் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. 'ஐயா, கொஞ்சம் முன் கோபக்காருங்க ன்'' என்று எண்ணிக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டே வந்தான்.

கடைத் தெருவிலே ஒரே கூட்டம். மெதுவாகப் பார்த்து காரை ஓட்டிக்கொண்டே போனான். கடைத்தெருவைத் தாண்டியதும், கொஞ்சம் வேகமாக போக ஆரம்பித்தான்.

பாவி, யாரோ ஒரு ரிக்ஷாக்காரப் பயல் அப்பொழுதுதான் திடீரென்று குறுக்கே வண்டியை இழுத்துக்கொண்டு ஓடிவந்தான். ஆறுமுகம் உடனே டக்கென்று ப்ரேக் போட்டு நிறுத்தினான். பின்னால் உட்கார்ந்திருந்த பாஸ்கரை ஒரு குலுக்கு குலுக்கிற்று இந்த திடீர் ப்ரேக்.

"என்டா, முட்டாள். பார்த்துப் போறதில்லையா! ஏதாவது விபத்து ஏற்பட்டா யாருக்குடா நஷ்டம்? சுத்த கண்ட்ரியாயிருக்கேயே? இதுக்கு முன்னாடி சிட்டியிலே கார் ஓட்டியிருக்கியா?" என்று விடுவிடுவென்று தன் முன்கோபத்தை அள்ளிக் கொட்டினார் பாஸ்கர். ஆறுமுகத்தை இந்தளவு உரிமையோடு, இவ்வளவு ஆத்திரமாக இதுவரை யாருமே திட்டியதில்லை. இதே வார்த்தைகளை உத்தமநாதபுரத்திலே யாராவது கூறியிருந்தால், அந்த விநாடியே சொன்னவர்களை சொர்க்கலோகம் போகச் செய்திருப்பான், ஆறுமுகம்.

ஆனால் அன்று அவனுக்கு பயம் தான் இன்னும் அதிகமாகியது. "ஐயோ சின்ன எஜமான் என்ன செய்வாரோ!" என்று ஏற்பட்ட பயம் அவன் நெற்றியில் ஏற்பட்ட வியர்வையை அதிகப்படுத்தியது.

(தொடரும்)

SANKARAN PROGRESSIVE TUTORIALS
(Karunanidhi Park, Teppakulam p.o Tiruchi)
COLLEGE, HIGH SCHOOL AND ENGINEERING

Opening on 6th June 1954 with Mr. N. J Devadas M.A. (who put Tiruchi on the Tutorial map] as Principal. And Mrs Judith Louis M. A. [former Lecturer in English, Govt. College, Coimbatore] as Vice-Principal. Assisted by an able staff famous in the Tutorial line.

Office:–Clive's line
Teppakulam, Tiruchi.

I. D. NATHAN, M. A.
Secretary.

4-ம் பக்கத் தொடர்ச்சி

நாள் இரண்டுநாள், அறப்போர் நடத்தினால் என்ன ஆகும் இவர்கள் நிலை! தாடி வளர்ப்பு மட்டுமல்ல, தங்களைக் கொடுமைப்படுத்தும் போதெல்லாம், ஆண்களை எதிர்த்து இந்த அஸ்திரத்தைப் பிரயோகித்தால், என்ன ஆவர், இவர்கள்!!

"பயன்படுத்தாமலிருக்கிறார்கள்? வழக்கம்போல், மருக்கொழுந்து வாங்கிவராவிட்டாலே, கண்சிவந்து விடுகிறது, என் மனைவிக்கு! கேட்டபடி, புடவை வாங்கித்தரவில்லையென்றால், அவள் அனுஷ்டிக்கும் மவுன விரதம், ஈட்டியாகிக் குத்துகிறது, இருதயத்தை. அப்பப்பா! தங்கள் காரியத்தைச் சாதிக்க, நமது பெண்கள், அனுதினம், இந்த அம்புகளைத்தானே வைத்திருக்கிறார்கள்!" என்று, கூறுவோரும் உளர்.

உண்மைதான்! ருக்மணிக்குப் பாரிஜாதம் கிடைத்ததைக்கண்டு பொறாமை கொண்ட பாமா, கதவை மூடிக்கொண்டதும், கண்ணன், 'காமி! சத்யபாமா!', என்று பல்லைக் காட்டி நின்றதும், தாசிவீடு சென்ற அரங்கனைத் துடைப்பத்தாலடித்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்ட அரங்கநாயகியையும் பற்றி, அடிக்கடி, படிக்கிறோம் புராணங்களில்.

மாண்டிகிலோ மகளிர், இன்று துவங்கும் அறப்போர், நமது 'இல்லற ஜோதி' களுக்கு, நீண்டநாளாகத் தெரிவதுதான். ஆனால், அந்த வழக்கத்தில், சிறுமாறுதலைச் செய்து கொள்ள வேண்டும்! நமது, மகளிருக்கு, கணவன் போக்கு பிடிக்கவில்லையென்றால், முதலில் வருவது, கண்ணீர்! பிறகு, சிறு சிடுப்பு!! பிறகு ஒத்துழையாமை!!! இந்த முறையில், சிறுமாறுதலைச் செய்து கொள்ளவேண்டும் — அதனையே மாண்டிகிலோ மகளிர் கையாளுகிறார்கள்.

கண்ணீருக்குப் பதில், புன்னகை, அதிகமாகிறது! தலைவிரிகோலமாகக் கிடப்பதற்குப் பதில் அழகை அதிகமாக்கிக் கொள்ளுகின்றனர்!! அவைகளைக் காணும் கணவர்கள், கடலில் சிக்கிய கலம்போல் சுழல்கிறார்கள்—கண்ணே! மணியே! என்று நெருங்குகிறார்கள். அப்போது அஸ்திரம், வீசப்படட்டும்! இந்த, ஆண்கள், எவ்வளவு பெரிய, வீராதிவீரர்களாயிருக்கட்டும் — பெண்களுக்கு உரிமையா என்றுகேட்கும் பெரியவர்களாயிருக்கட்டும்—என்ன ஆகிறார்கள், என்று பார்க்கலாம்!

சண்டித்தனம் செய்யும் ஆண்களின் போக்கைக் கண்டித்து தமது உரிமைகளை நிலைநாட்ட, நமது பெண்கள், முயன்றால், எவ்வளவோ பயன்களைப் பெறலாம்! இல்லறத்தை ஜோதியாகவும் ஆக்கலாம்!! இதோ, அதனைத்திறமையாக செய்கிறார்கள், அமெரிக்க மாதர்கள்—மறந்துவிட வேண்டாம், விவாகரத்து உள்ள பூமி, அது! — எனினும், அங்கு பாலும் அதே நோக்கில் ஒத்துழையாமையினாலும், அவர்களை உருகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அழகு, எனும் அஸ்திரம், இருக்கும்வரை பெண்கள் அஞ்ச வேண்டியதில்லை, எதற்கும்! சமயமறிந்து, அந்த அஸ்திரத்தை வீசினால், என்ன செய்யமுடியும், இந்த ஆண்களால்? எண்ணிடவேண்டும், நமது பெண்கள்! அந்த எண்ணம் மலர்ந்து விட்டால், அனந்தசயனம் தடுத்தாலென்ன ஆச்சாரிய பீடங்கள் மறுத்தாலென்ன — நிச்சயம் தம்முடைய உரிமைகளைப் பெறமுடியும். தன்னிகரில்லாமல், சுதந்திரமாய் வாழவும் முடியும்.

★

போகிற போக்கில்

நாலே, நாலுபேர்! ஒரு தொகுதியில்!! இந்த நாலுபேரும் கூடி, ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த நெருக்கடியான நிலைமை காஷ்மீரிலுள்ள ஓரிடத்தில் ஏற்பட்டுவிட்டது. ஜம்பான் நகர தேர்தலின்போது, ஒரு தொகுதியில், நாலேபேர் இருக்கும் சமாசார விஷயம் தெரியவந்தது! மூன்று பெண்கள்; ஒரு ஆண், இவர்கள்தான் அந்தத் தொகுதியின் பொதுஜனங்கள். குறைந்தபட்சம், ஐந்து பேராவது இருந்தால்தான் யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியும்! இந்த சிக்கலான நிலைமை தெரிய வந்ததும் ஸ்தல ஸ்தாபன நிர்வாகிகள், இத்தொகுதியின் எல்லையை மாற்றும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

*

அரசியல்வாதிகள்மீது இஷ்டப்படி வார்த்தைகளைக் கொட்டி கண்டித்து, துவேஷிக்கிறார்களல்லவா? இது, வியாபாரத்துறையில் நடக்க முடியாதபடி, பாதுகாப்பு இருக்கிறது! தென் ஆபிரிக்காவிலுள்ள ஒரு சிகிரெட் கம்பெனி, மற்றோர் சிகரெட் கம்பெனியைப்பற்றி துவேஷப் பிரச்சாரம் செய்ததாம். இந்தப் பிரச்சாரத்தால் தன்னுடைய வியாபாரம் கெட்டுவிட்டதாகக்கூறி, அந்தக் கம்பெனி தொடுத்திருந்த வழக்கில் அண்மையில் தீர்ப்புவழங்கப்பட்டிருக்கிறது. துவேஷப் பிரச்சாரம் செய்த கம்பெனி 77 லட்சம் ரூபாய் மானநஷ்ட ஈடுதரவேண்டுமாம்!

*

பாகிஸ்தானில் கிழக்கு வங்கப் பிரதமர் 'ஹக்' தரும் தலைவலி, மிக அதிகமாகிவிட்டதாம். இந்த வேதனையில் பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி, ஆழ்ந்து கிடக்கிறாராம். டாக்கா ஆலையொன்றில்நடைபெற்ற கலவரத்தின் விளைவாக 300 பேர் செத்தனராம்! கொடூர சம்பவம். இது, கம்யூனிஸ்டுகளின் சதி—என்கிறது, பாகிஸ்தான் சர்க்கார். பாகிஸ்தான் சர்க்காரின் சதி, என்கிறது வங்காள சர்க்கார். இப்படி ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டு நிலைமையை குழப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

*

முஸ்லீம் லீக் கமிட்டிக் கூட்டம் அண்மையில், கராச்சியில் நடைபெற்றபோது, கூடிய கமிட்டி மெம்பர்கள் போட்ட கூச்சல் சகிக்க முடியவில்லையாம்! கமிட்டிக் கூட்டத்தைப் பற்றிக் கவலைப்படாது, ஒவ்வொருவரும் தத்தமது சொந்த விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்களாம்!! இதைக் கண்ட முகம்மதலி, இனிமேல் யாராவது பேசினால் இந்த உண்டியிலில் அபராதம் போடவேண்டுமென்று, சொன்னாராம்! அதன்படி, சிலர் அபராதம் போட நேர்ந்ததாம். அவர்களில் அதிகமாக அபராதம்செலுத்தியது, இரண்டு மூன்று அமைச்சர்களாம்!

★

"என்ன இருக்கிறது!"

1

"ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் யாவும் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு, அந்த அரசுகள் கொண்ட ஒரு கூட்டாட்சி அமைக்கவேண்டும் என்பதே எமது நோக்கம்" —தி. மு. க.

*

"நான்கு பிரதேசங்களும் மொழிவாரியாகப் பிரிக்கப்படவேண்டுமென்பதை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால், அவையனைத்தும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டுமேயொழிய, தனியாட்சி நடத்துவது கூடாது"

—பிறர்.

*

"திராவிட நாடாம்!—என்ன பொருள் இதற்கு?"

"எத்தனையோ தடவை விளக்கியிருக்கிறார்களே உனக்கு..."

"விளங்கவில்லையே, இன்னும்!"

"உண்மையாகவா?"

"ஆமாம்! அவர்கள் கோரும் திராவிடநாடு எதுவென்பதே தெரியவில்லையே...எல்லையும் குறிப்பிடவில்லையே!

"இப்போதுள்ள நான்கு மொழி பேசப்படும் இடங்களும் சேர்ந்தது என்று அடிக்கடி கூறிவருகிறார்களே!"

"அப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? இன்ன இடத்திலிருந்து இன்ன இடம்வரை, இந்த ஆற்றுக்கு இப்பால், அந்த ஆற்றுக்கு அப்பால் என்றல்லவா குறிப்பிட வேண்டும்"

"அப்படிக் குறிப்பிட்டா பாகிஸ்தானம் கேட்டார்கள். எல்லைக் கமிஷன் செய்யவேண்டிய வேலையல்லவா அது"

"என்னமோப்பா, எனக்குப் பிடிக்கவில்லை"

*

"பெயரைப் பாருங்கள் பெயரை! திராவிடநாடாம். ஏன்? இந்தியா என்று சொன்னால் என்னவாம். பெரிய நாடாக இருப்பது பெருமையா! சிதறுண்டு கிடப்பது நல்லதா? முப்பது கோடி மக்களும் ஒன்று திரண்டு நின்றால், இந்த உலகமே நம்மைப் பார்த்து மருளுமே! திராவிட நாடாம், திராவிட நாடு. எப்படிப் பிரிப்பது அதனை? வாள் கொண்டா! மண்வெட்டியால் தோண்டியா!!

*

பலருக்கு எரிச்சல்! சிலருக்கு 'இதுகளும் கேட்பதா' என்னும் வயிற்றெரிச்சல்! இன்னும் சிலருக்கு [illegible] காய்ச்சல்—பல ரகமானோர், நமது கோரிக்கையைக் குறைகூற முன்வருவோர். இவர்களுக்கு வேண்டிய பதிலைக் கூறி வருகிறோம்; வேண்டுமெனில் இன்னும் எடுத்துக் கூறவும் தயாராக இருக்கிறோம். இவ்வண்ணம் சந்தேகவிளக்கம் பெறுவோரைத் தவிர்த்து, இன்னுமோர் 'ரகம்' இருக்கிறார்கள்—அவர்கள் மனம் விசாலமானது—உள்ளமும் வெண்மையானது—உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒற்றுமையாக ஒரே மாதிரியாக வாழக்கூடாதா என்னும் ஆசை அதிகம் கொண்டவர்கள்—அவர்கள் கேட்பார்கள் "தம்பி! பேதம் பிரிக்கலாமா? உலக முழுமையும், அன்பு ஆட்சி அரும்பவேண்டுமென்று, அறிஞர்கள் கூறுகிற இந்த நேரத்தில், தனி நாடா? தகுமா, அது! எல்லோரும், மனிதர்தானே. பேதா பேதம் ஏன்?" என்று. இவர்களின் எண்ணம் தூய்மையானது! பிறர் போற்ற வேண்டிய உள்ளமுங்கூட.

*

அந்த மலர்க்கொடி, மாடிவிட்டு மந்தமாருதம்! அவளது நெஞ்சங் கவர்ந்த காதலனும், ஏழையல்ல; பிரபுவம்சம்! இடையில பேருரு வெடுத்து நின்றது, இரண்டு குடும்பத்துக்குமிடையிலே இருந்துவந்த தகராறு. ஆனால் அந்த இளங்காதலர்களின் இதயங்களை, பரம்பரை விரோதம் பிரித்துவிடவில்லை நீர் எனக்கு, நான் உமக்கு! என்றாள், எழிலாள். நீயின்றேல், இந்த உலகில் நான் இல்லை!—என்றான், அழகன் குடும்பத் தலைவர்களோ, குத்து! வெட்டு! பிடி! அடி! என்று குமுறுவர், ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தால். குலச்செல்வங்களோ, கண்ணே! மின்னே! கனிரசமே! விடாதே என்னை! பிடியும் என் கையை! என்று பிரியமொழி பேசுவர், சந்திக்க நேர்ந்தால். ஓர் இரவு வானத்திலே நிலவு! வாலிபனின் இதயத்திலோ இருள். காதலியோ, வீட்டு மாடியிலே நிற்கிறாள் விரகதாபச் சுமையுடன். காவலர் பல உண்டு, மாளிகையில்! கண்டால் கண்டதுண்டமாக்குவர், அவனை. கத்திகளுக்கு அஞ்சுமோ, காதல்! தாண்டினான்! தோட்டத்துக்குள் நுழைந்தான்! அவள் மாடியில்—இவன் பூமியில் இருவரும் பேசுகிறார்கள்! அந்த சமயம் கட்டத்திலதான், சாகாத வார்த்தையொன்றை வீசியிருக்கிறார், ஷேக்ஸ்பியர்—ரோமியோ, ஜூலியட் நாடகத்திலே. காதலனைக் காண்கிறாள், காதலி! களிப்பு ஓர் பக்கம்—கவலை மற்றோர் பக்கம். ஐயோ! இவர் என் எதிரியின் வீட்டுப் பிறந்தார்? என்று எண்ணுகிறது, இதயம். அவனைப் பார்க்கிறாள்! நெஞ்சில் போதையேற்றும் அவனுடைய நீண்ட தோள்கள், தெரிகின்றன—அதே நேரத்தில கூர்வாளைப்பாய்ச்சிடுவாரே, அப்பா என்கிற குலை நடுக்கமும் உண்டாகிறது. "அன்பரே!" என்று அழைக்கிறாள் "என்விழி விருந்தே!" எனக் கூவுகிறாள். அப்போது கூறுகிறாள் "கண்ணாளா! விழிக்குள் புகுந்து, இதயத்துக்குள் ஏறிவிட்டீர், நீர். இதனையறியாத என் பெற்றோர் நீர் எதிரியின் மகன், என்கிறார்கள். மாண்டேகு வம்சத்துக்கும் கேபுலட் குடும்பத்துக்கும், எட்டுமோ? என்கின்றனர். நீர், மாண்டேகு வம்சமாம்! மாண்டேகாம்!—என் கண்களுக்கு நீர் மாண்டேகாகத் தென்படவில்லை. மதனுருவாகக் காட்சியளிக்கிறீர். நீர், மாண்டேகாக இருக்கவேண்டாம்! மதனுருவனாகவே இருந்துவிடும்! மாண்டேகாம், மாண்டேகு! என்ன இருக்கிறது பெயரில்? உமது முகத்தைப் பார்க்கிறேன்—கரும்பு போலிருக்கிறது எனக்கு—மாண்டேகு, தென்படவில்லை! கால்களைப் பார்க்கிறேன், அவைகள்

காலகள்ளாகத் தென்படுகின்றனவே யொழிய, மாண்பேதும் இல்லை; அந்நியரைக் குறிப்பிட்டு இந்தப் பெயரைச் சூட்டுகிறார்கள் இதோ பாருங்கள் விசித்திரத்தை! ரோஜா, இதனை எந்தப் பெயரிட்டழைத்தால் என்ன? மணம் குன்றுமா? மகிழ்ச்சி மாறுமா! பெயரைச் சொல்லி, பேதம் புகுத்துகின்றனர். மாச்சரியத்தை வளர்க்கும் அந்தப் பெயர் வேண்டாம் உங்களுக்கு. என்ன இருக்கிறது பெயரில்?''

விகதாரப் போக்கில், கர்த்தனைப் பார்த்து கர்த்தர் கேட்பதாக அருமையான கருத்து ஒன்றைச் சிதறிவிட்டார், உலகக் கவி. அந்தக் கவியின் நிலையிலே இருப்போர் இவர்கள்! மனிதனுக்கு எப்பெயர் இருந்தாலென்ன! அவன் எங்கு வாழ்ந்தாலென்ன! பொதுவில் மனிதன்தான் — ஆனால், உன்னதமான இந்த லட்சியம், எழுதவும் பேசவும் இனிப்பு! செயலிலோ சிக்கல்! ஆங்காங்குள்ள அறிஞர்கள், ஓய்வு நேரங்களில் உல்லாசமாகப் பேசிடும் ஒரு புனித விஷயமாக இருக்கிறதேயன்றி, இதன் பொருளை உணர்வோரும், பொதிந்திருக்கும் அருமையை அறிவோரும் மிகச் சொற்பம். எட்டாத வானவில்! அடையமுடியாத உலகம் என்றே எல்லோரும் எண்ணுகின்றனர். உலகம் எங்கும் இதனை ஏற்றுக்கொள்ளும் பொற்காலம் ஒன்று வந்து, மனிதனை மனிதன் சுரண்டும் வேட்டைக் காலம் மறைந்து, உலகிலுள்ள மனிதர் எல்லாம் 'ஓரே இனம்' எனும் உயரிய கோட்பாடு நடைமுறைக்கு வந்தால், 'உத்தமர்களே! ஒருநாளும் சேரோம்! நாங்கள் திராவிட இனம்' என்று பிரிந்து நிற்கும் பேதம் கொண்டோரல்லர் நாம் — ஒத்துழைக்கும் குழுவிலே இருப்போம். நிலைமை அதுவல்ல இன்று! மனிதன் மனிதனாக இல்லை. அவர்களிலே புலியுமிருக்கிறது, புள்ளிமானும் இருக்கிறது; நாயும் இருக்கிறது, வெறிநாயும் இருக்கிறது. அவன் வாழும் நாடுகளும், அவனது குணத்தையொட்டியே இருக்கின்றன. தனி மனிதன், மற்றொருவனின் உதிரத்தை உறிஞ்சுவதுபோல், ஒரு நாடு மற்றொரு நாட்டின் வளத்தைக் கொள்ளையிடும் முறை கோலோச்சுகிறது, இன்று. இந்த நெருக்கடியான நிலைமையிலே உலகத் தத்துவமும், ஒரே மனிதக் கோட்பாடும் எங்ஙனம் இனி பேசப்படுவது முறையாகும்? எவர் ஒத்துக்கொள்வார்? இந்த உண்மையை மறந்துவிட்டு, உபதேசம் புரிகிறார்கள், இந்த உத்தமர்கள்!

*

திராவிடநாடு! திராவிடர்! என்று சொல்லும்போது, மாச்சரியத்தை வளர்க்கும் கூச்சல் என்று மதிப்பிடுகிறார்களே ஒழிய, அதில் பொதிந்திருக்கும் பொருளை ஆராய்வோர் கொஞ்சம். துவேஷத்தால், சொல்லுகிறார்கள்! வெறியால், கேட்கிறார்கள்! குறுமதி, அவர்களுக்கு! கோணல்புத்திக்காரர்கள்! —இதுபோல, கொட்டுகிறார்களே ஒழிய, நமது உள்ளத் தூய்மையை உணர்வதில்லை மாற்றார் உலக முழுமையும் 'மனிதர்'களிருந்தால், நாமும் தனிநாடு கேட்கவேண்டிய அவசியமில்லை! குமரிமுனையில் வாழும் கேசவனும், இமாசலத்தில் வாழும் ஈஸ்வரலாலும், ஒருவரையொருவர் சுரண்டாது, சுகமும் மணமும் பெற்று, சோதரர்கள் போல் வாழ்ந்தால், நாம் எது சொன்னாலும் ஏற்பார்! எவ்வளவு எடுத்துரைத்தாலும், ஒப்பார்!! என்ன இருக்கிறது பெயரில்?— என்று கேட்பர். அதுவல்ல, நிலைமை! எவ்வண்ணம் உலக அரங்கிலே அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்திருக்கிறதோ — அதைக் கண்டு பிற நாடுகள் அஞ்சுகிறதோ, அதுபோலவே இங்கும் ஓட்டத்தைப் பார்த்து மற்றொருவர் அஞ்ச வேண்டியதில்லையிருக்கிறது. பண்டிதர்கள் தான்! ஆனால், வகையும் வாழ்வும் வேறு வேறாயிருக்கிறது!!

*

இந்த வாழ்வையும் வகையையும் மாற்றியமைக்க வேண்டுமென்றால், என்ன செய்வது? ஊருக்குக் குடை பிடிக்கலாம், என்பர்! உலகத்தையே மாற்றியமைக்கலாம் எனவும் கூறுவர்!' அந்த ஒப்பற்ற காலம் வரும் வரையில், காத்துக்கிடக்கவா, காய்ந்த சருகாய் உருமாறவேண்டியது தானா? அந்த உன்னதகாலம் வரும் வரையில், இமாசலத்து ஈஸ்வரலால் இமயமாக இருப்பான், குமரிமுனை கேசவன் கொடுமையை அனுபவித்துக்கொண்டே இருப்பான் என்றால் யார் இதனை ஏற்க முடியும்!

பொற்காலம் பூக்கட்டும்—காலை, இடைக்கட்டும் பல, அதற்காக இன்று வேண்டிய மாம்பழத்தை மறுத்துவிடுவதா, மூடரே? இந்த உண்மையை உணரமறுப்பதாலேயே திராவிட நாடா! என்ன இருக்கிறது பெயரில்! என்றெல்லாம் பேசுகிறார்கள் என்ன இருக்கிறது, பெயரில்! எதுவும் இல்லைதான். ஆனால், அந்தப் பெயரினை ஏன், சூடுகிறோம்? வடவரை ஒழிக்கவா! பார்ப்பனரைத் தாக்கவா! அல்ல, அல்ல. உலகச் சோலையில், பெயர் தேவை, இன்று! புதுமணம் குலுங்கும் பூமிகள்கூட, தனக்கோர் பெயருடன் தான் விளங்குகின்றன! இந்நிலை நீடிக்கும்போது, எழுச்சி பெறும் ஓர் வர்க்கம், தனக்கென ஓர்பெயரை பழைய பெயரை, ஏற்பதிலும், ஒரு நாட்டினை அமைப்பதிலும் அந்த நாட்டை மனிதர் வாழும் சோலையாக ஆக்க முயற்சிப்பதிலும், தவறென்ன? இந்த உண்மையை அறிவதவிட்டு, பெயரைக் கேட்டு மருள்வதும், வியாக்யானங்களை விவரிப்பதும், காய்ச்சலின் விளைவே யொழிய, கருத்துள்ளோர்செயலா? என்ன, இருக்கிறது பெயரில்? — அதற்கென உருவுண்டா! நிறமுண்டா! அது ஓர் இலட்சியச் சொல்—இப்படி அமைக்கப்போகிறோம் எமது நாட்டை எனும் குறிப்புச் சொல். அதனைக் கண்டு, அச்சமும் எள்ளலுமா, அள்ளி வீசுவோர் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் — திராவிட நாடு! ஒரு உன்னத நாட்டின் பெயர்; எதிர்கால இன்பப் பூமியின் பெயர் — பேதமற்ற சமுதாயம் அமையப் போகும் இடத்தைக் குறிக்கும் பெயர். எரிச்சலுக்குரியதல்ல! துன்பத்தை நாடுவதல்ல!! — இதனை, பிறர் புரிந்துகொண்டால், தூற்றமாட்டார்கள், நம்மை.

★

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.